stered No. M. 2330

SIDDHANTHA
Vol. 26—No. 7

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 26 | விஜய ஆடி 1953 ஜூலை |

உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| காட்டு ஒலி | ... | 2.. |
| திருத்தாங்காலைமாடம் | ... | 295 |
| திருச்சிக்கல் | ... | 298 |
| சிவஞான முனிவரும் சைவ சித்தாந்தமும் | ... | 303 |
| சங்கற்பநிராகரணம் | ... | 313 |
| ..முடிச் சோழன் | ... | 319 |
| ..பா சுவாமிகள் | ... | 322 |
| ..ச்சிகளின் ..ருக்கம் | ... | 333 |

DIGITIZED

R673N211, M28
M53.287
18682

..ம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
..சிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
சித்தாந்த மகா சமாஜம்
..(ஜோன்ஸ் ரோடு), சைதாப்பேட்டை, சென்னை-15

## சமாஜ அறிக்கைகள்

(1) 'சித்தாந்தம்' அச்சாகும் சாது அச்சுக்கூடத்தின் உரிமையாளர் திருமதி. இராஜம்மாள் அவர்கள் அச்சகத்தைத் தம் மகளிர் பெயருக்கு மாற்றினார்கள்; இம் மாறுதலைச் செய்ய சென்னை சீப் பிரசிடென்ஸி மேஜிஸ்ட்ரேட் சட்ட ரீதியாக அங்கீகரித்த பிறகே சித்தாந்தம் வெளிவரலாம்; அங்கீகாரம் 2?-7-53 கிடைத்தது. இதனால் இம் மாத இதழ் இவ்வளவு காலந் தாழ்த்துப் பிரசுரிக்க நேர்ந்தது.

(2) மயிலைகிழார் இளமுருகனார் பதிப்பாகிய தேவாரம் அடங்கன் முறையை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப ஒரே பிரதிக்கு ரூ. 1-9-0; இரட்டைப் பிரதிக்கு ரூ. 1-10-0 ஆகிறது. மயிலைகிழாருக்குப் பணமனுப்புவோர் இந்தத் தபாற் செலவைக் கவனிக்கவும்.

(3) 1953 சைவப் புலவர் தேர்வுப் பாடத்திட்டம்:

I. இலக்கியப் பகுதி

1. திருக்குறள்—அறத்துப்பால்-(அதிகாரம் 1 முதல் 38 வரை).
2. ஒன்பதாம் திருமுறை—(திருவிசைப்பா – திருப்பல்லாண்டு).
3. திருமந்திரம்—(முதல் தந்திரம் – உபதேசம் 30 பாக்கள்).
4. பதினொராம் திருமுறை—(திருமுருகாற்றுப்படை அற்புதத் திருவந்தாதி).
5. பெரியபுராணம்—(காரைக்காலம்மையார் சரிதம்).

II. சாத்திரப் பகுதி

1. சிவஞானபோதம்.
2. சிவஞானசித்தியார்–சுபக்கம்.
3. திருக்களிற்றுப்படியார்.
4. திருவுந்தியார்.

இந்த நூல்களுக்கு எந்த உரையேனும் படிக்கலாம்.

இத்தேர்வில் கலந்துகொள்வோர் 1953 அக்டோபர் 20 தேதிக்குள் சமாஜக் காரியதரிசிக்கு இரண்டு ரூபாய் பிரவேசக் கட்டணம் அனுப்பித் தம் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

Reg. M. 2330

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | விஜய ஆடி 1953 ஜூலை | இதழ் 7

## நாட்டு ஒலி

1. உலக அமைப்பு:—நம்மைச் சுற்றிலும் உள்ள உலகம் வியக்கத்தக்க அமைப்பைக் கொண்டிருக்கின்றது. கல்முதல் மனிதன் இறுதியாக உள்ள ஒவ்வொரு பகுதியையும் நுணுகிப் பார்க்கின் அளவு கடந்த அற்புதச் செயல்களே காணலாம். அண்டங்களில் உள்ள அமைப்பைப் போலவே பிண்டங்களிலும் காண்கின்றோம். இந்த இயற்கை அற்புதங்களை அறிய வேண்டி மனிதன் கூடிய மட்டும் நுழைந்து பார்க்கின்றான். பார்க்கப் பார்க்க, புதிய பொருள்கள் தோன்றுகின்றன. பழைய நாளில் இரண்டு அறிஞர்கள் இவ்வற்புதங்களைத் தேடிச் சென்றார்கள். ஒருவர் விண்ணை நோக்கி மேலே கிளம்பினார். விண்கலை முழுதும் அறிந்து கொள்ள முடியாது தயங்கினார். மற்றவர் மண்ணை அகழ்ந்து கீழே சென்றார். அவராலும் அதைக் கண்டுகொள்ள முடியவில்லை. இவ்விருவரும் கண்டு கொள்ளாத பிரபஞ்சத்தின் இயல்புகளைத் தற்கால விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க முயலுகின்றனர்.

இவ்வுலக அமைப்பில் எதை எடுத்து ஆராய்ந்தாலும் மாறுபட்ட நிலைகள் இரண்டு உள்ளன. அவை இரண்டும் எதிர்பட்டே நிற்கின்றன. குணங்களில் நற்குணமும், தீயகுணமும் உண்டு என்பதை அறிவோம். ஒன்றைத் தேவகுணமாகவும், மற்றதை அசுரகுணமாகவும் புராணங்கள் வருணிக்கும். [illegible] பொருள்களில் வெட்டெனவை,

மெத்தெனவை என இரண்டு உண்டு. தாவரங்களில் இருவித தாதுக்கள் உண்டு. ஆற்றலில் இயல்பும், எதிர்ப்பும் உண்டு. மின்னொளியிலும் இயல்பும், எதிர்ப்பும் உண்டு (Positive, Negative). கணிதத்தில் கூட்டல் கழித்தல் உண்டு. உயிர் வகைகளில் ஆண், பெண் தன்மைகள் உண்டு. ஆகவே உலகில் எது எடுத்தாலும் எதிர்ப்புக் கொண்ட இரண்டு தன்மைகள் உண்டு என்று அறியலாம். இதுவே இயற்கையின் அதிசய அமைப்பு என்று அறிவோம்.

2. மக்கள் போக்கு :—இவ்வாறாக உலகில் எது எடுத்தாலும் எதிர்த்து நிற்கும் இரண்டு தன்மைகளைக் காணும்போது மக்களிடமும் அவ்வெதிர்ப்புத் தன்மை இருப்பது இயல்பு அல்லவா? மக்களுடைய போக்குகள் எல்லாம் இந்த வகையில் இரண்டு நிலைமைகளைக் கொண்டிருப்பதை அறிவோம். வெளிப்படையாக ஆண், பெண் என்ற பிரிவினை மக்களில் உண்டு. இப்பிரிவினை இயல்பாகவே மாறுபட்ட குணங்களை அவ்விரண்டிற்கும் தந்திருக்கின்றது. இம்மாறுபாடே ஒன்றையொன்று கவரச் செய்கின்றது. இவ்வகையில் ஒருவித அமைதி இன்பமும், பெருக்கமும் ஏற்படுகின்றன. இவ்விதமான எதிர் நிலையால் மக்கட் பெருக்கத்திற்கு அனுகூலமே ஒழிய, பிரதிகூலம் இல்லை.

ஆனால் மற்றொரு எதிர்நிலை மக்களுடைய செயல் போக்கில் இருக்கின்றது. மனிதனுடைய எண்ணங்கள், கருத்துக்கள், கொள்கைகள் என்ற சொற்களால் அறிவிக்கப்படும் உள்ளத்தன்மைகளில் சில எதிர்ப்பு நிலைகள் இருக்கின்றன. அவ்வெதிர்ப்பு நிலைகள் மக்களை அமைதிப்படுத்துவதற்கு மாறாகப் பிரித்து விடுகின்றன. அவ்விதச் செயல்கள் மக்கட் போக்குக்கு இன்பம் தாராது துன்பம் விளைக்கின்றன. இவ்வெதிர்ப்பு நிலைகள் மனிதனுடைய வாழ்க்கையில் பெரும்பாலும் தோன்றுகின்றன. அரசியல் பொருளியல், சமய இயல், அறஇயல் முதலிய பகுதிகளில் கொள்கை எதிர்ப்புகள் நிரம்ப உண்டு. அவைகளால் மனிதனுக்கு மிக்க பயன் உண்டா என்பது ஐயம்.

3. தமிழ்நாட்டுப் போக்கு :— மேலே கூறியபடி மனிதனுடைய எண்ணப் போக்குகளில் எதிர்ப்புக்கள்



சாதாரணமாக இருக்கத் தமிழ்நாட்டிலோ இவைகள் மிகுதியாகப் பெருகிப் பல இன்னல்களை ஆற்றி வருவதைக் காண்கிறோம். பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் சமயக் கொள்கைகளிலும் அரசியல் துறைகளிலும், பொருளியல் கொள்கைகளிலும், கல்வித் துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள் என்பது வரலாற்றுச் செய்தி. பின்னர் தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளை இழந்துபோன காலத்திலும் சமயக் கொள்கைகளிலும், கல்வித் துறையிலும் வீழ்ச்சியடையவில்லை. பின்னர் கல்வித் துறையில் தாழ்வு அடைந்த போதும், சமயக் கொள்கைகளில் வெறுமை அடையவில்லை. இப்படியிருக்க, நாட்டில் தன்னுரிமை வழங்கப் பெற்ற பிறகு சமயக்கொள்கைகளில் எதிர்ப்புகள் தோன்றி வருகின்றன. படிப்பறிவு குறைந்த நிலைமையில் பொது அறிவின்மை மேம்படும். அதனால் பகுத்தறிவு குறைந்துவிடும். பொருள் அல்லாதவற்றைப் பொருளாகக் கொள்வது இயல்பாகிவிடும். அறிவின்மையையும் அதனால் உண்டாகும் முரட்டுக் கொள்கைகளையும் போக்க வேண்டும் என்று எண்ணுகிற சில சீர்திருத்தக்காரர்கள் இதற்கெல்லாம் சமயமே காரணம் என்று கூறி, அதனை முழுவதும் அழித்துவிட முயல்கின்றனர். இந்த இயக்கம் நாளுக்கு நாள் பரவிக் கொண்டு வருகின்றது. இளைஞர்களை வெகுவாக அது பிடித்திருக்கின்றது. இவ்வியக்க வளர்ச்சியில் படித்தவர்கள் சேர்ந்துகொள்ளப் படியாதவர்கள் பழைய கொள்கைகளிலேயே ஈடுபட்டிருக்கக் காண்கிறோம்.

4. முரண்களின் ஏற்றம் :—சமயச் சார்பில் ஏற்பட்டிருக்கும் முரண்கள் ஏற்றமடைந்து வருகின்றன. சில சீர்திருத்தக்காரர்கள் மேல நாட்டு விஞ்ஞானத்தை அரைகுறையாகப் படித்துவிட்டுக் கீழ்நாட்டுச் சமயதத்துவங்களை அறவே ஒழிக்க வேண்டுமென்றும், பொது மக்களின் வாழ்க்கையையும் எண்ணப் போக்கையும் முழுவதுமே மாற்ற வேண்டுமென்றும் மேடைகளில் ஏறிப் பிரசங்கிக்கிறார்கள். நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மக்களில் ஏற்றத் தாழ்வு முதலியவைகளின் காரணமாகப் பாமர மக்களும் அரைகுறையாகப் படித்த இளைஞர்களும் இவ்வுபதேசங்களில் வெகு எளிதில் சிக்கி விடுகிறார்கள். சமயச் சார்பான சடங்குகளையே

சமயக் கொள்கைகளாக எண்ணிக் கொண்டு சமயங்களை வெறுக்கிறார்கள். உலக வாழ்க்கையிலே மேல் நாடுகளில் உல்லாச வாழ்க்கையும், இன்பம் துய்த்தலையும் கண்டு விட்டுத் தமக்கு இவை எட்டவில்லையே, இதற்குக் காரணம் சமயம்தான் என்று எண்ணி விடுகிறார்கள். ஆனால் வெகு காலமாகப் பண்டைச் சமயக் கொள்கைகளில் ஈடுபட்டிருக்கும் சில குடும்பங்களோ, இளைஞர்களுடைய மாறுபட்ட கருத்துக்களை ஒரு சிறிதும் அறிந்துகொள்ள முயலாமல் கிணற்றுத் தவளைபோல சுயநல வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இளைஞர்களின் மனப்பான்மைக்கும் முதியவர்களின் மனப்பான்மைக்கும் ஏணி வைத்தும் ஏற முடியாத வேற்றுமைப் பாடு இருக்கக் காண்கிறோம். கொள்கை முரண்கள் நாளுக்குநாள் ஏற்றம் அடைவது காணில் மக்களிடை அமைதி எவ்வாறு தோன்றும்?

**5.** சமயங்களின் ஆர்வம் :—தமிழ் நாட்டில் கொள்கை முரண்கள் மிகுதியாகிக் கொண்டிருக்க அதனால் அமைதியின்மை ஏற்பட, வாய்ப்போரானது கைப்போராக ஏற்படத் தொடங்குகிறது. சீர்திருத்தவாதிகள் சடங்குகளை ஒழிக்கவும், உருவ வழிபாட்டை இழிக்கவும், புராணக் கதைகளை அழிக்கவும் தொடங்குகிறார்கள். பழங்கொள்கையினர் இவ்வியக்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். இப்போராட்டத்தினால் பழங்கொள்கைகளில் அதிர்ச்சிக்கு மாறாக வலிவும் ஏற்படக் காண்கின்றோம். மேல் நாட்டிலோ விஞ்ஞானக்கலை உயர உயர, தத்துவ ஆராய்ச்சியில் கலைஞர்கள் நோக்கம் மேலே செல்லுகின்றது. விஞ்ஞானத்தில் உண்மை ஆராய்ச்சி செய்த கலைஞர்கள் கீழ் நாட்டு ஆன்மீக தத்துவங்களில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். இவ்வேறுபாடு மேற்குக்கும், கிழக்குக்கும் உண்டு. மேற்கு நாட்டார் ஆக்க வேலையில் புகுந்திருக்கக் கீழ்நாட்டார் அழிவு வேலையில் புகுகின்றார்கள். இந்த நிலைமையை நன்கு அறிந்த மேல்நாட்டுச் சமயப் பணியாளர்கள் கீழ்நாடுகளுக்கு வந்து தங்கள் சமயங்களை இங்கே புகுத்தத் தொடங்குகிறார்கள். ஒரு சொட்டு அமைதித் தேனாவது வாயில் விழட்டும் என்று அங்காந்து கொண்டிருக்கும் இளைய உள்ளங்களுக்கு மேல்நாட்டுச் சமயங்கள் நல்வரவுகளாக இருக்கின்றன. இதற்கேற்றாற்போல நமது அரசியலும் சமயச் சார்பற்ற அரசியல் ஆகிவிட்டது. சென்ற ஐந்து ஆண்டுகளாக மேல் நாட்டுச் சமயங்கள் இங்கே தழைக்கத் தொடங்கிவிட்டன. ஒருபுறம் பகுத்தறிவு இயக்கம், மறுபுறம் பிற சமயத் தாக்குதல், இவ்விரண்டிற்குமிடையே உள்நாட்டுச் சமயம் தவித்துக்கொண்டிருக்கின்றது.



**6.** அருள்நெறி இயக்கம் :—பகுத்தறிவியக்கம் வரம்பு மீறிச் செல்லத் தொடங்கினபடியால் நாட்டில் எதிர்ப்புகள் தோன்றுவது இயல்பு. இந்த நிலைமையில் அருள்நெறி இயக்கம் தோன்றி நாட்டில் அரியசேவை செய்து வருகின்றது. குன்றக்குடித் தவப்பெரியார் இதனைத் தொடங்கி வைத்து உள் அன்போடு பாடுபடுகிறார்கள். நாடு முழுவதும் ஊர் ஊராய்ச் சுற்றி மக்களின் உணர்ச்சிகளைத் தூயவழிக்கு எழுப்பி வருகிறார்கள். இராமநாதபுரம், தஞ்சை, மதுரை, நெல்லை மாவட்டங்களில் ஓராண்டாக இடைவிடாமல் சொற்பொழிவுகளை நிகழ்த்தி அங்கங்கே கிளைச் சங்கங்களைத் தக்கமுறையில் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். சென்ற திங்களில் ஈழநாடு சென்று 12 நாட்களில் 50 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இவ்வாறு அருட்பணி செய்து தற்போது கொங்குநாட்டிற்கு வந்திருக்கின்றார்கள். இங்கே சமாஜத்தில் தலைமை வகித்தும், அருள் நெறிக்கூட்டம் ஒன்று ஏற்படுத்தியும், செந்தமிழ்க் கல்லூரி ஒன்றைச் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் ஏற்படுத்தியும் அரியதொண்டு செய்திருக்கிறார்கள். தூய்மையான திருநீறு வினியோகம் செய்யும் இயக்கம் ஒன்றை நிறுவித் திருநீற்றுப் பழக்கத்தைப் பரவச் செய்கிறார்கள். சிறப்பாக இளைஞர்களின் மனப்போக்கை ஐயம் திரிபற, நல்லொழுக்கத்திற்குத் திருப்பி வருகிறார்கள்.

**7.** தவநெறி இயக்கம் :—தமிழ் நாட்டில் மற்றொரு அரிய இயக்கம் தொடங்கியிருக்கிறது. மதுரை சம்பந்தர் மடாலயத்தின் இளவரசாக ஈழநாட்டிலிருந்து ஒரு பெரியார் பட்டம் வகித்திருக்கிறார்கள். ஈழநாட்டுக் கொழும்பில் வாரவழிபாட்டு இயக்கத்தில் மிகுந்த சேவை செய்து கொண்டிருந்த இப்பெரியார் தென்னாட்டிலும் சேவை செய்ய விழைந்து உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழ் நாட்டிற்கு அர்ப்பணம் செய்திருக்கின்றார். தூய்மையான தவ ஒழுக்கத்தைப் பின்பற்றி மக்களுள் அதனை முன்

னேறச் செய்யும் பொருட்டுத் தவநெறி இயக்கத்தைத் தோற்றி வைத்திருக்கின்றார். இந்த இயக்கத்தினால் இளைஞர்கள் மனப்பான்மை நன்னிலைமையும், அமைதியும் அடையும் என்பதில் ஐயமில்லை.

**8.** கல்விச்சீர்திருத்தம் :—நாட்டின் அமைதியின்மைக்குப் படிப்பின்மையே காரணமல்லவா? சென்னை அரசியலார்கள் எழுத்தறியாமையை எளிதில் போக்கடிப்பதற்காகக் கிராமக் கல்விச்சீர்திருத்தம் கொண்டு வரப்போகின்றார்கள். பள்ளிக்குச் செல்ல முடியாத ஏழைச் சிறுவர்கள் ஒரு பகுதி நேரம் பெற்றோர்களின் தொழிலைச் செய்தும், மற்றொரு பகுதி நேரம் எழுத்தறிவு பெற்றும் முன்னேற வேண்டும் என்பது இச்சீர்திருத்தத்தின் கருத்து. இதற்கு எதிர்ப்பும் இருக்கின்றது. சில முறைகளில் குறைபாடு இருந்தாலும் பொதுவாக இந்தத் திட்டம் எழுத்தறிவைப் பரப்பும் என்று கூறலாம். எழுத்தறிவு பரவினால் மூடக் கொள்கை மறைந்துவிடும். இனி, நகரப் படிப்புத் திட்டத்திலும் திருத்தப்பாடு ஏற்பட்டு வருகின்றது. கலைப்படிப்பு மட்டுமன்றித் தமிழ்க்கல்வியை முன்னேறச் செய்யும் முயற்சியும் தோன்றியிருக்கின்றது. புதிதாகத் தமிழ்க் கல்லூரிகள் தோன்றுகின்றன. அவைகளில், பேரூர், ஸ்ரீசாந்தலிங்கர் கல்லூரியும் ஒன்று. இனி, கல்லூரிகளுக்கு அடிப்படையாகத் தமிழ்ப்பள்ளிகளையும் ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டமும் செய்திருக்கிறார்கள். இந்த வகையில் விஞ்ஞானக்கலை அறிவு ஒரு புறத்தில் இயங்கிக் கொண்டிருக்க, மொழிக்கலை அறிவு மற்றொரு புறத்தில் இயங்கிக் கொண்டிருக்கும். இவ்விரண்டு கலைகளும் ஒருசேர வளர்ச்சியடைந்தால் நாட்டின் கல்வித் திட்டம் முழுமையாக வளர்ச்சி பெறும். இனி எதிர்காலத்தில் காண வேண்டிய கனவு ஒன்று இருக்கின்றது. விவிலிய சகோதரர்கள் லௌகிகப் படிப்போடு சமயப் படிப்பையும் ஊட்டுகின்றாற்போலப் பொதுப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பிள்ளைகளின் தாய்ச்சமயங்களைக் கற்பிக்க வேண்டிய தவசியம். அவ்வாறு செய்யும்பட்சத்தில் மேலே காட்டிய முரண்பாடுகள் ஒவ்வொன்றாக மறைந்துவிடும். அவ்விதமான செவ்விய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

## 2. தலப்பகுதி

# 1. திருத்தூங்கானை மாடம்

(கோவைகிழார்)

**1.** இடம்: இந்தத்தலம் தற்காலத்தில் பெண்ணாகடம் என்று வழங்கப்பெறுகிறது. இவ்வூர் விருத்தாசலத்திலிருந்து திருச்சிபோகும் இருப்புப் பாதையில் விருத்தாசலத்திற்கு அடுத்து, தெற்கே உள்ளது. ஊருக்குத் தெற்கில் வெள்ளாற்றுப் பாசனங்கள் இருக்கிறபடியால் சுற்றியும் செழிப்பாக இருக்கின்றது. திருக்கோயிலைச் சுற்றிலும் மாடவீதிகள் உண்டு. கோயிலுக்கு அருகே உள்ள இரண்டு தெப்பக்குளங்களும் பெரிதாக இருக்கின்றன. ஆனால் நன்றாகக் கவனிக்கப்படாததினால் படிகள் சிலமாக இருக்கின்றன.

**2.** கோயில்: கோயில் பெரியது. வேலை மிகப் பழமையானது. ஊரின் பண்டைப் பெயர் கடந்தை என்பது. அதில் உள்ள கோயிலின் பெயர் தூங்கானை மாடம் என்பது. இந்த விவரங்கள் சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் காணப்படுகின்றன. ‘கடந்தையுள் தூங்கானை மாடம்’ என்பது தேவாரத்தில் காணும் சொல் தொடர். மேலும் தேவாரத்தில் இக்கோயில் தடங்கோயிலென்றும், பெருங்கோயில் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே இக்கோயில் மாடக் கோயில்களில் ஒன்றாகக் கருதவேண்டும். பெரும்பான்மையாகக் கோச்செங்கட் சோழனார் கட்டிய மாடக் கோயில்கள் சோழநாட்டில்தான் உள்ளன. நடுநாட்டில் உள்ளது இது ஒன்றே என்று அறியவேண்டும். ‘தூங்கானை மாடம்’ என்ற பெயரினாலேயே இக்கோயில் மாடக்கோயில் என்று அறியலாம். வெள்ளாறுமட்டும் சோழநாடு எட்டியிருக்க, அவ்வெள்ளாற்றின் வடகரையில் பெண்ணாகடம் இருக்கிறபடியால், இங்கே மாடக்கோயில் தோன்றியிருப்பதில் வியப்பு இல்லை. மேலும் இவ்வூரின் பெயர் கடந்தை என்பது மட்டும் அன்றி ‘பெண்ணாகடம்’ என்றும்கூட, சம்பந்தர் கூறியிருக்கின்றார்.

**3.** கோயில் அமைப்பு : கோயிலின் மூலஸ்தானம் மற்ற கோயில்களைப் போல் அல்லாமல் மிகுந்த ஒளிபெற்றதாய் நாற்புறமும் வாயில்கள் உடையதாய் இருக்கின்றது. அதில் நிற்கின்ற ஒரு யானையின் நான்கு பெருங் கால்களைப் போல மூலஸ்தான விமானம் அமைக்கப்பெற்றிருக்கின்றது. அதனாலேதான் கர்ப்பக் கிரகத்திற்கு, "தூங்கு + ஆனை" என்ற பெயர் வந்தது போலும். இனி தொண்டை நாட்டிலே உள்ள பல கோயில்களின் மூலஸ்தான விமானங்கள் யானை முதுகு போன்றவை. அவ்விதச் சிற்பத்திற்கு வடமொழியில் 'கஜப்பிரஷ்டம்' என்று பெயர். தூங்கானை மாடம் என்பது கஜப்பிரஷ்டம் என்பதின் தமிழ்ச் சொல்லாக இருக்கலாம்.

இனி கர்ப்பக் கிரகத்திற்குச் சிறிது வடபுறமாக மற்றொரு மாடம் இருக்கின்றது. அது சோழநாட்டு மாடக் கோயில் போல கட்டப்பட்டுள்ளது. கோச்செங்கட் சோழன் யானை புகவொண்ணாத முறையில் மாடக்கோயில்களைக் கட்டினான் என்பது புராணம். அதுபோன்று இம்மாடக் கோயிலும் இருக்கின்றது. ஆகவே, தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையில் உள்ள இந்த நடு நாட்டுக்கோயிலில் தொண்டை நாட்டு ஆனைமுதுகு அமைப்பும் சோழநாட்டு மாடக்கோயில் அமைப்பும் இரண்டும் பொருந்தியிருக்கக் காண்கிறோம். இந்தவிதமாக இரண்டுவிதச் சிற்பங்கள், ஒன்றுசேர விரவியிருக்கும் அமைப்பு இந்தக் கோயிலுக்கு மட்டும் உண்டு. இந்தப் பெருமை வேறு கோயில்களில் காணமுடியாது.

இனி மாடக் கோயிலுக்கு வடக்கேயுள்ளது அம்மன் கோயில். அது தனிக் கோயிலாக அமைந்திருக்கின்றது.

**4.** மூர்த்திகள் : சுவாமியின் பெயர் சுடர்க்கொழுந்து நாதர். அம்மன் பெயர் கடந்தை நாயகி. ஆனால் வடமொழியில் பிரளயகாலேஸ்வரரென்றும், ஆமோதனாம்பாள் என்றும் வழங்குகிறார்கள். 'ஆமோதனாம்பாள்' என்றால் 'அழகியகாதலி.' இங்கே நந்தியின் பெயர் 'பிரளயங்காத்த நந்தி' என்பது. இந்த நந்தி, பெருமானைப் பார்த்துக் கொண்டிராமல் கிழக்கே நோக்கிக் கொண்டிருக்கின்றது. மாடக்கோயில் 20 அடி உயரத்தில் அமைந்திருக்கின்றது. அதன் மூர்த்தியின் பெயர் சௌந்தரேசுவரர்.



**5.** ஐதீகங்கள் : இந்தத் தலபுராணத்தின்படி இந்த மூர்த்தியை ஒரு பெண், ஒரு ஆ (காமதேனு), ஒரு கடம் (யானை) பூஜித்தாகவும் அதனால் பெண்ணாகடம் என்று பெயர் வந்ததெனவும் காண்கிறோம். இவ்வூர் கலிக்கம்ப நாயனார் அவதரித்த தலம். முன்னாளைய ஏவலாளன் துறவியாகி விருந்துக்கு வர அவன் பாதங்களைக் கழுவுவதற்குத் தாமதித்த மனைவியின் கைகளைத் தறித்து, தாமே கழுவிப் பெருமையடைந்த நாயனார் அவர் ஆவர். அப்பர் இங்கே எழுந்தருளியபோது இறைவனால் இடபக்குறிகளைத் தோள் மீது பொறிக்கப் பெற்றார். இது "பொன்னார் திருவடிக்கு" என்ற பாசுரத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் மெய்கண்ட தேவரின் தந்தையார் அச்சுதகளப்பாளர் வாழ்ந்த ஊர். அவருடைய அரண்மனை இருந்த இடத்தில் ஒரு மேடு தென்படுகின்றது. அம்மேட்டிற்கு "களப்பாளர் அரசன்மேடு" என்று பெயர் வழங்குகின்றது. அதனருகில் உள்ள இறையூரில் சம்பந்தருக்கு இறைவன் முத்துப் பந்தர் அளித்தார்.

**6.** மற்றக் கோயில்கள் ; இறையூர் கோயிலுக்குத் தாகந்தீர்த்த ஈசுவரர் கோயில் என்று பெயர். சம்பந்தர் வந்தபோது அடியார்களின் தாகம் இங்கே தீர்க்கப்பட்டது. திட்டக்குடியில் இறைவன் பெயர் வைத்தியநாதர். அம்மன் பெயர் அசலாம்பிகை யம்மை. திருவட்டத்துறை என்று வழங்கும் அரத்துறை, இவ்விரண்டு ஊர்களுக்கும் இடையில் உள்ளது.

**7.** நூல்கள் : இத்தலத்திற்கு ஒரு புராணம் உண்டு. அதற்குக் கடந்தைப் புராணம் என்று பெயர். சம்பந்தர், அப்பர் இருவரும் பாடிய பதிகங்கள் இரண்டு உண்டு. திருத்தொண்டர் புராணத்தில் இவ்வூர்ப் பெருமை மூன்று இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. அவை அப்பர், சம்பந்தர், கலிக்கம்ப நாயனார் புராணங்களாகும்.

# 2. திருச்சிக்கல்

[சு. சுவாமிநாதநேசிகர்]

திருச்சிக்கல் : பண்—இந்தளம்

வானுலா வும்மதி வந்துவா வும்மதில் மாளிகை
தேனுலா வும்மலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞானமா கநினை வார்வினை யாயின நையுமே. (1)

சோழவள நாட்டிலே தஞ்சை ஜில்லாவில் நாகப்பட்டினம் தாலுகாவில் சிறந்து விளங்கும் தலங்கள் பல. அவற்றுள் முருகன், சிவபெருமான், திருமால் ஆகிய மும்மூர்த்திகளாலும் சிறப்புற்று விளங்குவது சிக்கல். சிக்கற் பெரும்பகுதியில் முருகன் 'சிங்கார வேலவர்' என்னும் நாமந் தாங்கி எழுந்தருளி யிருக்கின்றார். கலியுகத் தெய்வமாக—தமிழ்த் தெய்வமாக விளங்குகின்றமையின் நாள்தோறும் பலர்வந்து வழிபாடு செய்கின்றனர்.

**1.** இருப்பிடம் : இப்பதி தென்னிந்திய இருப்புப் பாதையில் தஞ்சை—நாகூர் கிளைப்பாதையில் நாகப்பட்டினத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது. சிக்கல் புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு பர்லாங் தூரத்தில் கோயில் அமைந்திருக்கிறது.

**2.** புராண வரலாறு : (தலமகிமை) முன்னொரு காலத்தில் பன்னிரண்டு ஆண்டு மழையின்றிப் போயிற்று. "விசும்பில் துளி வீழின் அல்லால் மற்றாங்கே, பசும்புல் தலைகாண்பரிது" என்ற பொய்யில் புலவரின் வாக்கு மெய்யாயிற்று. காமதேனுவும், புல் அகப்படாது தவித்தது; பசியால் வாடியது; எங்கும் அலைந்தது. இறுதியில் செத்த நாய் ஊனைத் தின்று உயிர் தாங்கிற்று. சிவபெருமான் காமதேனுவைப் பார்த்து, "நீ நாய் ஊன் தின்றாவது உயிர்தாங்க எண்ணியதால் புலி முகத்தோடு வாழ்க" எனச் சபித்தார். காமதேனு கவலை கொண்டு சாபம் நீங்குவது எப்படி? என்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தவித்தது. திருவருள் பெருகிய இறைவன்



சிக்கலுக்குச் சென்று பாற்குளத்தில் மூழ்கி மல்லிகையின் கீழ் வசித்தால், இப்பாவம் கழிய உன் புலிமுகம் நீங்கும் என்று அருளினார்.

காமதேனு அவ்வாறே செய்து தன் உண்மை வடிவம் உற்றது. மகிழ்ச்சியால் உடல் பூரித்தது. பால் பெருகிற்று. பாலால் குளம் நிறைந்தது. அதுமுதல் அமிர்த தடாகம் பாற்குளம் ஆயிற்று. சிவபெருமானுடைய ஆணையால் சிக்கலை அடைந்த வசிட்டர், அந்தப்பாலில் இருந்து உண்டான வெண்ணெயினால் சிவலிங்கத் திருவுருவமைத்து வழிபாடு இயற்றினார். மகிழ்ந்த சிவபெருமானும் அச் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு நின்று, "வேண்டியதைக் கேளும்" என்றார். "தான் பெற்ற பேறு, வையகமும் பெற வேண்டும்" என்ற கருணை வழிந்த கருத்துடைய வசிட்டர் இச்சிவலிங்கத்திலேயே எப்போதும் எழுந்தருளி எல்லோருக்கும் இம்மை மறுமைப் பயன்களை அளித்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தனர்.

"வேண்டுவார் வேண்டுவதே ஈயும்" விண்ணவர் பெருமானும் அவ்வாறே விளங்கி வருவாராயினர். வசிட்டரும் வழிபாடு ஆற்றி வருவாராயினர்.

**3.** ஆலய அமைப்பும் திருஉருவும் : கோயில் புதுத் திருப்பணி செய்யப்பெற்று மிகஅழகாகக் காணப்படுகிறது. கோயில் கிழக்கு மேற்கில் 388 அடிகளும் தென் வடலில் 222 அடிகளும் உள்ளது. இதன் கீழைராஜகோபுரம் 80 அடி உயரம். ஏழுநிலை மாடம் அமைந்தது. பிராகாரத்தில் கோலவாமனப் பெருமாள் கோயிலுக்கென்று தனித்த ஒரு சிறு கோபுரம் உண்டு. சிதம்பரம் காஞ்சிபுரம் போல, இத்தலத்திலும் பெருமாள் கோயிலும் சிவன் கோயிலும் ஒருங்கமைந்திருப்பது சமய வொற்றுமையைக் காட்டும் சான்றாகும்.

கோயில்கொண் டெழுந்தருளிய சிறந்த மூர்த்திகள் சிங்கார வேலவர், சோமாஸ்கந்தர், வேனெடுங்கண்ணி, பால் வெண்ணெய்நாதர், கோலவாமனப் பெருமாள் ஆகிய இவர்கள். கோயிலுக்கு மேற்புறத்தில் திருக்குளம் இருக்கிறது. அதற்குப் பாற்குளம் என்று பெயர். (க்ஷீரபுஷ்கரணி) தல விருக்ஷம் மல்லிகைச்செடி. இவ்வாலயத்தின் வாயிலின்

தென்புறத்தில் விநாயகர் தண்டபாணி இருக்கின்றன. கட்டுமலையின் அடியில் சுந்தர கணபதி இருக்கிறது. தக்ஷிணாமூர்த்தி இரண்டுண்டு. (கிருத்திகா விநாயகர் என்று மற்றொரு விநாயகர் இருக்கிறது. பால்வெண்ணெய் நாதர் எழுந்தருளி இருப்பது ஒரு கட்டு மலை. இது சோழர் கோச்செங்கண்ணனாற் கட்டப்பெற்றது. அவர் கட்டிய கோயில் சோழநாட்டில் 70 உண்டென்று தெரிகின்றது. இதனை, "எண்டோளீசர்க்கு எழில் மாடம் எழுபது செய் துலகாண்டான்" என்ற வைகாலூர்த் தேவாரமாகிய சம்பந்தர் வலியுறுக்கும். மேலக்கோடியில் சிற்பத்திறமும் கடவுள் தன்மையும் கவினும் உடைய ஆறுமுகக் கடவுள் மயில் வாகனத்தின் மீது எழுந்தருளியிருக்கிறார். அந்த மூர்த்தி முருகன் என்பதற்குக் கூறப்பெறும் பேரழகன் என்னும் பொருளுக்குப் பெரிதும் பொருந்தியதாகக் காணப்படுகிறது. "தோள்கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமல மன்ன தாள்கண்டார் தாளே கண்டார்" என்ற கம்பர் வாக்குக்கு எடுத்துக்காட்டாக, வணங்கும் அன்பர் கண்கள் மூர்த்தியை விட்டகலினும், மூர்த்தி கண்களை விட்டகலாது இருக்கின்றது. மலையை விட்டுக் கீழிறங்கியதும் வேனெடுங்கண்ணி அம்மையாரின் ஆலயம் இருக்கிறது.

**4. கோலவாமனப் பெருமான்:** நவநீத சுவாமியின் வடபால் கோலவாமனப் பெருமாள் சேவை சாதித்து அருளுகின்றார். நின்ற திருக்கோலம். வாமனவதாரம் எடுத்து, சிவபக்தனான மகாபலியை அழிக்கச் சிவபெருமானிடம் வரம்பெறக் கயா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய எழுந்தருளினார் என்றும், அதனால் "கயா மாதவர்" என்ற பெயர் உண்டு என்றும் புராணம் கூறுகிறது. தாயார் பேர் "கோமளவல்லித்தாயார்". பெருமாளுக்கு வடமேற்கு மூலையில் ஆஞ்சநேயர் ஆலயம் இருக்கிறது.

**5. கல்யாணமண்டபம்:** கீழ்க்கோபுரத்திற்கு அருகில் வெளியிலே கல்யாண மண்டபம் இருக்கிறது. இது சுமார் 300, மக்கள் இருக்கக்கூடியது. மின்சார வசதிகளோடு கூடியது. இது இத்தலத்திற்குத் தனிப்பெருமை தரவல்லது. இது காரனேஷன் ஹால் என வழங்கும்.



**6. சிற்பமும் சித்திரமும்:** சிங்காரவேலவர் சந்நிதியிலிருக்கும் சுற்றுச் சுவர்களிலும், கார்த்திகை மண்டபத்துக்கு எதிரிலுள்ள சுற்றுச் சுவர்களிலும், பூ வடிவங்கள் அமையப் பலநிறங்கள் பூசப்பெற்றிருப்பது காண்பார்க்குக் களிப்பையும் புத்துணர்ச்சியையும் பிறப்பிக்கவல்லது. உட்பிராகாரத்தில் பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமாள் முதல் மாரீசவதம் வரையில் உள்ள இராமாயண வரலாறுகளைத் தெரிவிக்கின்ற சுதைவேலைச் சிற்பங்கள் பல அமைந்திருக்கின்றன.

மற்றும் "துருவமகரிஷி தவம்" "கஜேந்திரமோட்சம்" பதஞ்சலி வியாக்ரபாதர், நடராஜர், ஆறுமுகக் கடவுள், தியாகராஜர், தட்சிணாமூர்த்தி முதலிய சுதையாலான திருவுருவங்களும் தோற்றமளிக்கின்றன.

பிராகாரத்தின் மேல்மண்டபத்திலும் சுவர்களிலும் கந்தபுராண வரலாறுகள் பல வர்ண சித்திரங்களாக எழுதப்பெற்றுள்ளன. கல்யாண மண்டபத்தில் (காரனேஷன் ஹாலில்) 'பார்வதி கல்யாணம்' சித்திரம் நன்றாக அழகுபெற உயிர் ஓவியமாக எழுதப் பெற்றுள்ளது. சிற்ப சித்திரங்கள் ஒவ்வொன்றும் ஊன்றி யறிந்து இன்புறத்தக்கன.

**7. வழிபட்டோர்:** இந்திரன், வசிஷ்டர், காமதேனு, முசுகுந்த சக்கரவர்த்தி, முருகன், விசுவாமித்திரர் முதலிய தேவர்களும் மற்றும்பலமுனிவர்களும் சித்தர்களும், கந்தர்வர்களும் தனித் தனியாகச் சிவலிங்கம் அமைத்து வழிபாடியற்றிச் சிவப்பேறெய்தினர்.

**8. உற்சவங்கள்:** நவநீதப் பெருமானுக்குச் சித்திரைமாதத்தில் பிரமோற்சவம் கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதத்தில் சிங்காரவேலவருக்கு ஸ்கந்தசஷ்டி விழாவும் சூரசம்ஹாரமும் மிகச்சிறப்பாக நடைபெறும். இவ்வற்புத விழாவினைக் கண்படைத்தார் யாவரும் கண்டுகளிக்க வேண்டுவது மிக்க அவசியம். கந்தசஷ்டித் திருவிழா 6-ம் நாள் அன்று திருத்தேர் விழா நடக்கும். சிங்காரவேலவர் திருத்தேருக்கு எழுந்தருளும்போது "யந்திர ஸ்தாபனம்" செய்வது வழக்கம். அவ்வியந்திரமானது ஒரு புன்னைக் கொட்டை போன்ற ஒன்றனுள் அடக்கி வைக்கப் பெற்

186892

றுள்ளது. அதனை எடுத்துச் சிங்காரவேலவர் திருவுந்திக்கு அருகில் வைத்துக் காவித்துணியாற் பிணித்து மேல் வெண் பட்டுச் சுற்றி அதன்மேல் பொற்கவசம் சாத்துவது வழக்கம். தேர்விழா முடித்து வேலவர் மலைக்கு மேல் வந்ததும் சாத்துபடி களைந்தால் பெருமான் திருமேனியும் திருமேனியிற் சாத்திய பட்டும் வியர்வையால் நனைந்திருக்கும். அதனை இப்போதும் கண்கூடாகக் காணலாம்.

**9.** பாடல்கள்: இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் புகழ்ந்து திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாடிய "வானுலா வும்மதி வந்துலா வும்மதில் மாளிகை" என்ற தேவாரப் பதிகம் ஒன்றும், இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிங்காரவேலவர் என்ற முருகனைப் புகழ்ந்து அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் இரண்டும் உள்ளது.

**10.** பூஜைகள்: இவ்வாலயத்தில் அனுதினமும் ஐந்து கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

**11.** தீர்த்தம்: இவ்வாலயத்திற்கு மேற்புறத்தில் உள்ள தீர்த்தத்தில் காமதேனு தனது பாலைப் பெய்தமையால் பாற்குளமெனவும் க்ஷீரபுஷ்கரணி எனவும் கூறப்படுகிறது.

**12.** ஆலய ஆட்சி: இவ்வாலயம் சென்னை இந்து மத அறநிலைப் பாதுகாப்புக் கழகத்தினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்வாகஸ்தர் ஒருவரால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

**13.** கல்வெட்டுகள்: இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுகள் எட்டு உள்ளன. அவற்றுள் இரண்டு கோலவாமனப் பெருமாள் விஷயமானவை. ஒன்று சிங்காரவேலவருக்குத் தொடர்புடையது. மற்றவைநவநீத சுவாமியைப்பற்றியவை.

**14.** திருப்பணி இத்திருக்கோயில் கருங்கல் திருப்பணி. சுற்றுமதில் செங்கல் திருப்பணி. இதனைச் செய்தவர்கள் 1899 ம் ஆண்டிலிருந்து 1934-வது ஆண்டுவரை தர்மகர்த்தாவா யிருந்தவரும் இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா தெக்கூரில் வசித்த ஸ்ரீ கரு. முத்து அழகப்பச் செட்டியார் அவர்கள். நிறைந்த நல்லெண்ணத்தோடு இவ்வாலயத்தை முற்றும் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்துவிட்டுக் காசிக்குச் சென்று காசியிலேயே மரணம் வாய்க்கப்பெற்றுச் சிவப்பேறெய்தினர். இவருடைய திருஉருவமும் மனைவியார் திருவுருவமும் அம்மையார் ஆலயத்துத் தூண்களிரண்டில் வேலைப்பாடுற அமைக்கப்பெற்றுள்ளன.



**15.** திருநாமங்கள்: சுவாமி—பால்வெண்ணெய்நாதர். தேவியார் — வேனெடுங்கண்ணி. தலமரம் — மல்லிகை, அரசு. தீர்த்தம்—க்ஷீரபுட்கரணி. தேவாரப்பாடல்—1. திருப்புகழ் பாடல்—2.

கந்த மார்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்நல்
செந்தண் பூம்பொழிற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடிச்
சந்த மாச்சொன்ன செந்தமிழ் வல்லவர் வானிடை
வெந்த நீறணி யும்பெரு மானடி மேவரே. (11)

---

## 3. கலைப்பகுதி

# சிவஞான முனிவரும் சைவசித்தாந்தமும்*

(புலவர் முருகவேள். B. O. L.)

### பல்கலைக் குரிசிலாய புலமை வல்லாளர்

சிவஞான முனிவரர் இற்றைக்கு ஏறத்தாழ 167 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த பெரும்புலவர். சங்ககாலப் புலவர்களைப் போலப் பிற்காலப் புலவர்கள் அத்துணைப் பெருஞ்சிறப்பினர் அல்லர் என்பது ஆராய்ச்சியில் வல்ல அறிஞர்கள் கருத்து. ஆயினும், அதற்கொரு புறனடையாக நம் சிவஞான முனிவர் விளங்குகின்றார். சங்ககாலப் புலவர்களுக்கு அவர் எவ்வகையிலும் குறையாத செவ்விய புலமையராவர். புலமை நலத்திற்குரிய துறைகள் எத்துணை யுண்டோ, அவைகளெல்லாவற்றிலும் முனி

* ஈரோடையில் நிகழ்ந்த சைவ இளைஞர் மாநாட்டிற் பேசியதனைத் தழுவி எழுதியது.

வரர் பெருந்திறம் பெற்றவராவர். இலக்கணம் இலக்கியம் தருக்கம் உரைநடை மொழிபெயர்ப்பு கவிதை ஆராய்ச்சி மறுப்புரை என்னும் இன்னோரன்ன பலவற்றிலும் சிவஞான முனிவர் ஒப்புயர்வற்ற பெருந்தகையாளர்.

சுருங்கக் கூறலுறின், அவரை ஒரு பெரும் [1]பல்கலைக் குரிசில், [2]புலமை வல்லாளர் என்றுரைத்தல் பெரிதும் பொருந்தும். உரையாசிரியர்களிற் சேனாவரையரைப் போலச் சிவஞான முனிவரும் 'வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவர்' என்பதனை அவர்தம் நூல்கள் நன்கினிது விளக்குகின்றன. "கல்வி தறுகண் இசைமை கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" எனத் தொல்காப்பியனார் கூறிய பெருமிதம் நான்கனுள் தலைசிறந்த கல்வி பற்றிய பெருமிதத்துக் குரியவர் நம் முனிவரர் எனலாம். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதற்கேற்பத் தம் கல்வி வல்லமையால் எக்கொள்கையினையும் நிறுக்கவும் மறுக்கவும் வல்லவர் அவர் ! 'கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி' முதலிய நூல்கள், முனிவரரின் இத்தகைய கல்வி வல்லமையை விளக்கும் நல்ல பெருஞ்சான்றுகளாக அமையும். ஆங்கிலம் கற்றவர்க்கே ஆராய்ச்சியறிவுண்டென்று எண்ணும் ஒரு சிலரின் கருத்து முனிவரர் திறத்திற் புரைபட்டொழியும். 'தவத்தால் மனந்தூயராய் இறையருள் பெற்றோர்' அவர் உயர் சிவஞான போத நூற்கு உரைகண்டாராதல் வேண்டும். 'அன்பெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டவர் கண்ணப்பர்' ஆதல் போல, 'அறிவெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டவர் சிவஞான முனிவர்' என்றுரைத்தல் மிகையன்று. திருஞான சம்பந்தர் போலச் சிவஞான முனிவரும் 'ஞானத்தின் திருவுருவம்' ஆவர் என்றலிற் பிழையில்லை.

## பாண்டித் துரைத் தேவரின் பாராட்டு

முனிவரரின் இத்தகைய பெருங் கல்வி வல்லமையினை, அவர்தம் நூற்களைப் பலகாலும் பயின்றுணர்ந்து இன்புற்ற பாண்டித் துரைத்தேவரவர்கள், அழகுறப் பாராட்டியுள்ளனர். கல்வியிற் பெரிய முனிவரரை உயிர்களிற் பெரிய யானையாக அவர் உருவகம் செய்கின்றார். ஆயிரம்

[1]Versatile Genius [2]Intellectual Giant



படைவீரர்கள் சேர்ந்தாலும் யானை ஒன்றின்முன் நிற்கலாற்றாமைபோல, எத்துணைப் புலவர்கள் கூடினராயினும், அவரெல்லாம் புலமைத் துறையில் முனிவரரின்முன் நிற்கலாற்றார் என்பது கருத்து. இங்ஙனம் முனிவரரைப் புலமை யானையாக உருவகம் செய்த தேவரவர்கள், யானைக்குரிய இயல்புகளெல்லாம் முனிவரர்க்கும் அமையக் கூறுகின்றார். கடலிற் குளித்தல், சங்கிலியை யறுத்தல், தறியை (தூணை) வீழ்த்துதல், தருக்களை அகழ்ந்தெறிதல், முகபடாம் அணிதல், இருமருங்கும் மணிகள் இரட்டி ஒலிப்ப வருதல், மதம்பொழிதல் முதலியன யானைக்குரிய இயல்புகளாகும்.

எனவே, சிவஞான முனிவராகிய வாரணமும் கலைதேர் நமச்சிவாய குரு கருணைக்கடலில் திளைத்தாடுகின்றது ; உலகப் பற்றுகளாகிய சங்கிலித் தொடரை அறுத்தது ; அதற்குப் பற்றுக் கோடாகிய காமமாகிய தூணை விழும்படிச் செய்தது ; உலகமாகிய பொழிலிடை நுழைந்து ஆண்டுள்ள பல்வேறு சமயங்களாகிய மரங்களையும் அசைத்து ஆராய்ந்து அடிவேரோடு அகழ்ந்தெறிந்து மறுத்தொழித்தது ; இறைவன் திருவருளையே முன்னிட்டு முகபடாமாக அணிந்துநின்றது ; வேதம் ஆகமம் என்னும் பொதுநூல் சிறப்புநூல்களாகிய இருதிற மணிகளும் முழங்கச் 'சைவசித்தாந்தம்' என்னும் மதநீரினைப் பொழிந்து கொண்டு, பெருமிதமாக உலகம் முற்றும் வெற்றியோடு சுற்றி உலாப்போதருகின்றது என்னும் கருத்துப்படப் பலவகைச் சொற்பொருள் நலங்கள் அமையத் தேவரவர்கள் அழகுறப்பாடிப் பாராட்டுகின்றார் ! சிவஞான முனிவர் பெருந்தகையின் ஒப்புயர்வற்ற பெரும் புலமைப் பெற்றியினை இதனினும் சுவைபடப் பிறிதெவ்வாறு புகழ்ந்து போற்றுதல் இயலும் ?

## சைவசித்தாந்தத்தின் சிறப்பு

இத்தகைய பெரும்புலமை வித்தகராகிய சிவஞான முனிவரர் உலகிற்குச் செய்தருளிய தலைசிறந்த பெருந்தொண்டு, 'சைவசித்தாந்தம்' எனப் பெயரிய அரும்பெருந் தத்துவக் கொள்கையினை நன்கினிது தம் நூல்களால்

விளக்கிப் பரப்பி வளர்த்தமையேயாம். [1]"தென்னிந்திய மக்களின் மிகச்சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவசித்தாந்தமாகும்" எனப் பேரறிஞர் போப் ஐயரவர்கள் சைவசித்தாந்தத்தினைப் பாராட்டுவர்! [2]"இந்திய நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிலும் சைவசமயமே மிகவிரிந்ததும், பெரும்பாலான மக்களால் தழுவப் பெற்றதும், ஐயத்திற்கு இடனின்றி உண்மையிலேயே பெருஞ்சிறப்பு வாய்ந்ததுமாகும். அச்சைவசமயமானது சிறப்பாகத் தென்னிந்தியாவுக்கும் தமிழ்மக்களுக்குமே உரிய தனிப்பெருஞ் சமயமாகும்" எனவும் அவர்கள் புகழ்ந்திருத்தல் கருதற்பாலது! [3]"மெய்ப்பொருள் நூற்றுறையிலும் இயற்கைப்பொருள் நூற்றுறையிலும் அண்மையில் வளர்ச்சி பெற்றுள்ள மேலைநாட்டு முடிபுகள் யாவும், வேறுபிற எந்தப் புதிய அல்லது பழைய சமயத்துக்கோ மெய்ப்பொருள் நூல்களின் கருத்துகளுக்கோ உரியனவல்லாமல், சைவசித்தாந்தம் ஒன்றற்கே யுரிய அடிப்படைக் கொள்கைகள் எல்லாவற்றின் உண்மையையும் உயர்வையும் மெய்ப்பித்து நிறுவுதற்குப் பலவகையிலும் ஒத்து நின்று துணையாக அரண் செய்கின்றன" எனப் பேராசிரியர் மறைமலையடிகள் விரிவாக ஆராய்ந்து துணிந்துரைப்பர். [4]"பிறபல்லா ஆராய்ச்சி

[1]"The choicest product of the Dravidian intellect."

[2]"Saivism is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India"—G. U. Pope.

[3]"The recent developments of western philosophy and physical science, go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to Savia Siddhantha and not to any other religion or philosophy, ancient or modern"—Maraimalai Adigal.

[4]" There is no school of thought, and no system of faith or worship that comes to us with anything like the claims of Saiva Siddhantha. The system possesses the merits of great antiquity. In the



வகைகளையும், கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விடச் சைவசித்தாந்தமானது சில சிறப்பியற் பண்புகளைப் பெற்றொளிர்கின்றது. அது பெரிதும் பழமை வாய்ந்ததாய், அப்பழமையினாலாய பெருமைகளைப் பெற்று விளங்குகின்றது. சமய உலகில், தென்னிந்தியாவில் உள்ள மிகப்பெரும் பழமையான சிறந்த கருத்துகளுக்கெல்லாம் சைவசமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும். தமிழ்மக்களின் சமயமாகிய அதனை நோக்க, அடுத்துள்ள ஏனைய பிறவெல்லாம் ஒப்பியன் முறைமையில் அயலவர்க்கு உரியனவும் அண்மையிற் றோன்றியனவுமேயாகும். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றின் வெளிப்பாட்டு முறையிலும், மிகமிகச் சிறந்ததொன்றாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது சைவசித்தாந்தமேயாகும்" எனக் கௌடி முதலிய பேரறிஞர்கள் பலரும் வியந்து விதந்துரைப்பர்.

## சிவஞான முனிவரரின் தொண்டின் திறம்

இத்தகைய சிறப்பின் மிக்க சைவசித்தாந்த தத்துவக் கொள்கையானது தொன்று தொட்டே தமிழகத்துச் சான்றோர்களால் போற்றப்பெற்று வந்ததாயினும், சந்தானாசிரியர்களுக்குப் பின்னர் நமக்கு அணிமைக் காலத்தில் அதனைப் பெரிதும் வளர்த்து நலஞ்செய்த பெருமை குமரகுருபர முனிவர், சிவஞானமுனிவர் என்னும் இருவர்க்குமே பெரிதும் உரியதாகும்.

"ஒருமலை தாங்கம்என் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்ததன்
சாரங் கொண்ட சைவ
சித்தாந்தத் தேனமுது அருந்தினர் சிலரே"

religious world the Saiva System is the heir to all that is most ancient in South India; it is the religion of the Tamil people, by the side of which every other form is of comparatively foreign and recent origin. As a system of religious thought, as an expression of faith and life, the Savia Siddhantha is by far the best that South India possesses."

—The Rev. Mr. Goudie.

எனக் குமரகுருபரர் சைவசித்தாந்தத்தின் அருமை பெருமைகளை உருவகம் செய்து பாராட்டி மகிழ்வர். "பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையே யன்றி, வாயன்மை தெளிந்து சைவ சித்தாந்த வழிதேறி அதீத வாழ்விற் போய் அண்மி...பெரும்பேறு நான்பெற்றேனேல்" எனவும், "மாறினேன் சமய பேத வழிப்படும் புன்மை யெல்லாம், தேறினேன் வீடு சேர்க்கும் சைவசித்தாந்தம் என்றே" எனவும் பெருமிதம் கொள்வர் சிவஞான முனிவர். வடநாடு சென்றும் சைவசித்தாந்தத்தினைக் குமரகுருபரர் பரப்பினார். தாம் வரைந்த அரிய உரைவிளக்கங்களால் சிவஞான முனிவர் சைவசித்தாந்தத்தினை வளர்த்தருளினார்.

சிவஞான முனிவர் தோன்றிற்றிலராயின், சைவசித்தாந்தம் இத்துணை விளக்கம் பெற்றிருத்தல் இயலாது. அவரது சிவஞானபோதப் பேருரை நீலகண்டர் சங்கரர் இராமாநுஜர் மத்துவர் என்போர்கள் வேதாந்த சூத்திரத்திற்கு வகுத்தருளிய பேருரைகளினும் மிகச்சிறந்தது என்பர் அறிஞர். வடமொழி தென்மொழி என்னும் இருபெரு மொழிகளினும் புலமை மிகப்பெற்று, தமிழில் மிகச் சிறந்த உரைநடை வரையும் திறம் சிறந்து, தமிழ்மொழியினைத் தாம் இயற்றிய உரைநூல்களால் முனிவரர் மிகவும் வளம்படுத்தினர். வடமொழியறிவு வேண்டும் என்னும் யாப்புறவு இன்றியே, முனிவரது நூல்களின் துணைகொண்டு சைவசித்தாந்தத்தினை யாவரும் கற்றுணரலாம். 'வீடு பிறராற் கூறார்' என்ற ஒருசிலரின் கருத்துப் புரை பட்டொழிய, அங்ஙனம் சைவசித்தாந்த மெய்ப்பொருள் நுட்பங்களை விளக்கிய முனிவரரின் பெருமை அளப்பரியது! "நீறுமிழ்த் தொண்டின் நீர்மை நினைக்கிலார் அளக்க வல்லார்?"

## ஒருசில உரை விளக்கங்கள்

நூலாசிரியர்களைக் காட்டிலும், நூலின் உரையாசிரியர்களே நம்மனோர்க்குப் பொருள்விளக்கம் செய்தலிற் சிறந்தவர்களாவர் என்பதனைக் கவிமணி அவர்கள்,

"கண்ணைக் கெடுப்பர் கவிராயர், அக்கண்ணை
எண்ணி உரைகாரர் ஈவாரே! — மண்ணின்மேல்



ஆக்கு பவரோ? அழிப்பவரோ மேலாவார்?
நோக்கிநீ நன்றே நுவல்"

என நகைச்சுவைபட எளியமுறையில் விளக்குவர். அதற்கேற்ப, சைவசித்தாந்த நுண்பொருட் கருத்துக்களெல்லாம் மெய்கண்டார் முதலிய சான்றோர்களாற் கூறப்பெற்றனவே யாயினும், அவற்றை நம்மனோர்க்கு விளக்கிய பெருமை சிவஞான முனிவரர்க்கே உரியது எனலாம். தாலிபுலாகநயம் பற்றி அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டுச் சுட்டிக் காட்டுகின்றோம்.

சிவஞானபோத அவையடக்கப் பகுதியின் உரையுள், புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னும் பாகுபாட்டுள் அடங்கிநிற்கும் பல்வேறு சமயக் கொள்கைகளையும் முனிவரர் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்து விளக்கியருள்கின்றார். அஃது அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தினைக் காட்டுவதோடு, நம்மனோர்க்குப் பெரிதும் நலம்பயக்கின்றது.

தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும்பக்கமும், அதனை மறுத்துக் கூறும் சித்தாந்தத் துணிபும், இயையும் என்னும் இவற்றின் நெறிமுறை சிறிதும் பிறழாமல் முனிவரர் சூத்திரப் பொருள்களை நுண்ணிதின் விளக்கிச் செல்கின்றார். அங்ஙனம் விளக்கிச் செல்கின்றுழி, அவர்தாமே பல தடைகளைக் கிளந்தெடுத்துக் கொள்ளும் திறமும், அவையிற்றை மறுத்துரைத்து விடைகூறும் திறமும், கற்பார்க்குக் கழிபேரின்பம் பயப்பனவாம்.

அவற்றுள், முதல்வன் ஐந்தொழில் செய்தல் தன் பொருட்டோ? பிறர் (உயிர்கள்) பொருட்டோ? வீணே? என்னும் வினாக்களை எழுப்பிக்கொண்டு—வரம்பில் இன்பம் உடைய இறைவன் தன்பொருட்டு ஐந்தொழில் செய்யான்; உயிர்களின் பொருட்டுச் செய்வன் எனின் உயிர்களும் அவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? எனப் பலதிற ஐயங்கள் நிகழும். உயிர்களும் இறைவனும் பொன்னும் பணியும்போல் அபேதமாயின், இறைவன் ஐந்தொழில் செய்தல் தன்பொருட்டேயாய் முடியும்; இருளும் வெளியும்போல் பேதமாயின், அவ்வுயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு ஒருவாற்றானும் இயைபில்லை; சொல்லும் பொருளும்போல் பேதாபேதம் எனின், அஃது

அநேகாந்தவாதமாதலோடு ஒருபொருட்கு இரண்டு தன்மை கோடலிற் போலியாய் ஒழியும். இனி வீணெனின், பித்தர் செய்யும் தொழிலோடொக்கும்... இறைவனுக்கு ஐந்தொழில் நிகழ்த்தல் விளையாட்டு எனச் சான்றோர்கள் பாடியமை, ‘ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு’ என்பது போல, அத்துணை எளிதிற் செய்யப்படும் ஆற்றலுடைமை பற்றியே யன்றிப் பிறிதில்லை. எனவே, மற்று விடுக்குமாறுதான் என்னையெனின், இறைவன் உயிர்களின் வேறுவன் எனினும், அவன் உயிர்களோடு கலப்பினால் உடலின் உயிர்போல் ஒன்றாகியும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல அவற்றின் வேறாகியும், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் உயிரறிவு போல உடனாகியும் நின்று காணும் உதவியும் காட்டும் உதவியும் செய்து இயக்கி வருபவனாகலின், அவ்வியைபு பற்றி இறைவன் உயிர்களின் பொருட்டே அருளால் ஐந்தொழில் நிகழ்த்துவன் என மெய்கண்ட தேவரின் கருத்தினை, முனிவரர் திறம்படத் தம் உரையுள் தெளிவுற விளக்குதல் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடற்பாலது. இன்னோரன்ன இடங்கள் பலப்பல! குறுகிய எல்லைத்தாகிய இச்சிறுகட்டுரையுள் அவை தம்மையெல்லாம் ‘விரிக்கிற் பெருகும் தொகுப்பின் எஞ்சும்’ என அமைகின்றாம். சிவஞானபோத இரண்டாம் சூத்திரத்திற்கு முனிவர் வகுத்துள்ள மிகவிரிவான பேருரை அவர்தம் மதியிலச்சினையாக மிளிர்தல் கண்டுணர்ந்து கொள்க!

இங்ஙனமே, சிவஞான சித்தியார் சுபக்க உரையுள், ‘அறுவகைச் சமயத்து ஓர்க்கும் அவ்வவர் பொருளாய்’ என வரும் பாடற்கண், மங்கல வாழ்த்திற்கு இலக்கணமாகப் பன்னிரு சூத்திரப் பொருள்களையும் தம் வித்தகம் தோன்றத் தொகுத்துக் காட்டியுள்ள சிறப்பும், அதனோடும் அமையாது அதனினூங்கும் சென்று, அப்பாடற்கண் போந்த அறுவகை வினைஎச்சங்களானும் முறையே இறைவனது அறுவகைப் பண்புகளையும் தம் சதுரப்பாடு புலப்பட விளக்கியிருக்கும் அருமையும், கழிபெருஞ்சுவை பயப்பனவாம்.

இவ்வாறே, ‘மறையினால் அயனால் மாலால்’ என வரும் பாடற்கும் எளிதிற் றெரியும் பொருளையே யன்றி,



ஆகுபெயர்பற்றிக் கொள்ளத் தகும் பொருளையும் முனிவரர் விரித்துரைத்து நம்மை மகிழ்விக்கின்றனர்! மாயையின் இலக்கணம் கூறுவதாக ‘நித்தமாய் அருவாய் ஏகநிலையதாய்’ எனவரும் பாடற்கண், ஒவ்வொரு தொடரும் அமைய நேர்ந்ததன் இன்றியமையாமைச் சிறப்பினை முனிவரர் விளக்கியிருத்தல், நவில்தொறும் நூல்நயம் பயக்கின்றது. எனவே, முனிவரரின் அரிய பெரிய விரிவுரைகள் கிடைத்திலவாயின் நம்மனோர்க்குச் சைவசித்தாந்தம் பயிலுதல் “கடலைக் கையால் நீந்தினன் காரியம் போல்வதே”யாய் முடிந்திருக்கும்.

## கவிதை உவமைகளிற் சைவசித்தாந்தம்

இனி, உரையாசிரியர் என்னும் நிலையில் நின்று சைவ சித்தாந்தச் செம்பொருள் நுட்பங்களை விளக்குவது மட்டுமன்றி, ஒரு பெருங் கவிஞராகவும் இருந்து அவை தம்மை நம்மனோர்க்குப் புலங்கொள விளக்கும் பெருந்தகையாகத் திகழ்தலை அவர்தம் காஞ்சிப் புராணத்துட் காணலாம். ‘கவிஞர்களின் இயல்பான உண்மை உளநிலைகள் அவர்தம் உவமைகளாற் புலனாகும்’ என்னும் அறிஞர்களின் கருத்தினை, காஞ்சிப்புராணத்துள் முனிவரர் பெரிதும் கையாளும் சைவசித்தாந்த உவமைகள் மிகவும் வலியுறுத்துகின்றன.

“மாயைகாரிய உருக்களும் எம்பிரான் வடிவம் ஆயவேல் அவை அருள்மயமாகும்” அதுபோல், தம்பிதற்றுரையும் ஏகம்பர்தம் பெருமை விரவுதலால் துகளறத் தோன்றும் எனவும்; மழைப்பெயல் மாறித் தீர்ந்தும் தூவானத்தால் மரங்களெல்லாம் நுண்துளி துவற்றுதல், “போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும் வாதனை தாக்குமாபோல்” உளது எனவும்; பல இடங்களில் தோன்றும் அருவிகள் எல்லாம் ஒருங்கே சென்று பாலாற்றினை அணையும் தோற்றம், “சீரிய புவனந் தோறும் சிதறிய வினைகள் எல்லாம் ஓரிடத்து ஒருவன் தன்பால் உடங்குசென் றுறுதல் போலும்” எனவும்; பாலாறு ஒன்றே வயல்வளம் செழிப்பப் பலகால்களாகப் பிரிதல், “ஒருவ னாகிய சிவபிரான் உலகுயிர் அளிப்பக் கருணை கூர்ந்து முன் நவந்தரு பேதமும் காட்டும் திருநிகர்க்கும்” எனவும்; உழவர்கள் தண்ணீரைப் பலமடைகளிற் செல்லாதவாறு தடுத்து வயல்களிற் பாய்ச்சுதல், “பொறிகள்

ஐந்தையும் புறம்செலாது அடக்கி ஓர் நெறிக்கே குறிகொளும்படிச் செலுத்து பேராளர்தம் கோள்போல்" உளது எனவும்; வயல்களிற் பாய்ச்சிய நீரினை அதன் கலங்கல் தெளிந்த பிறகு உழவர்கள் வடித்துவிடுதல், "அருள் விளங்கலும் உடல்பொருள் ஆதிய பந்தம் தரும் அவன்புடை எய்துறக் கொடுத்திடும் தகைபோல்" உளது எனவும்; வைக்கோலினின்று நெல்நீங்கியதும் கடாக்கள் பிணையலை விட்டுச் செல்லுதல், "உடலின் ஆவி பிரிந்தெனை ஊழ்வினைத் தொடர்பு நீங்குவதொக்கும்" எனவும்; நெல்லைக் காற்றில் தூற்றும்போது பதர்கள் அகறல், "பொய்யகன்றவர் ஐம்பொறி போதல் போலும்" எனவும் பிறவாறும் முனிவரர் சித்தாந்த உவமைகளை எளிமைமிக அடுக்கிப் பாடிக் கொண்டே செல்லுதல் எத்துணை இன்பம் விளைக்கின்றது!

## தமிழிளைஞர்களும் சைவசித்தாந்தமும்

தமிழ்நலம் பேணும் தகைசால் இளைஞர்களாய தோழர்களே! சைவசித்தாந்தம் தமிழர்க்கேயுரிய தனிப் பெருந் தத்துவக் கொள்கை. அஃது இஞ்ஞான்றை அறிவியற்கலையாற் பெரிதும் அரண்செய்யப் பெறுவது! தருக்கநெறி பிறழாது ஆராய்ந்து காட்டி எத்தகைய ஐயங்களையும் போக்கித் தெளிவு செய்ய வல்லது! பகுத்தறிவுக்குச் சிறிதும் மாறுபடாதது! முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றித்தாய்ப் பிறங்குவது! நடைமுறை வாழ்க்கைக்குப் பெரிதும் இயைந்து சிறந்தொளிர்வது! அறிவாராய்ச்சிக் கலைக்களஞ்சியமாய்ப் பெருவிருந்தாய் விளங்குவது! பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் பலரும் போற்றிச் சென்றநெறியாய் நின்றிலங்குவது!

[1]"தெய்விகத் தத்துவக் கொள்கையானது எத்துணை இனிமை மிக்கதாக உளது! அறிவிலிகள் நினைப்பது

[1]"How charming is divine philosophy!
Not harsh and crabbed, as dull fools suppose;
But musical as is Apollo's lute
And a perpetual feast of nectar'd sweets
Where no crude surfeit reigns"—Milton.



போல, அது கடினமானதும் சுவையற்றதும் அன்று. அப்போலோவின் குழலிசைபோல அஃது இனிமை மிக்க இசைநலம் உடையதாகத் திகழ்கின்றது! தேனிற் றோய்த்த இனியபொருள்கள் போல எஞ்ஞான்றும் இனிமை பயக்கும் பெருவிருந்தாக அது விளங்குகின்றது. அதன்கண் சுவைக்குறைவோ தெவிட்டுதலோ சிறிதும் இலது" என மில்டன் என்னும் ஆங்கிலக் கவிஞர் பெருமான் கூறுவதற்கேற்பச் சைவசித்தாந்தமும் சிறந்து திகழ்கின்றது என்பது, உண்மை. வெறும்புகழ்ச்சியில்லை!

ஆதலின், [1]"சமயம் என்னும் புனிதம் மிக்க இனிய தெய்விகச் சொல்லில், பொன்னினும் மணியினும் விட மிகமேலான விலைமதிப்பையுடையதும், இவ்வுலகிலுள்ள பொருள்களையெல்லாம் கொடுத்தேனும் பெறத்தகுந்ததுமாய்ச், சொல்லுதற்கரிய எத்துணை அரும்பெறற் பொருட் களஞ்சியம் அமைந்துளது" எனப் பிறநாட்டினரும் சமய உண்மைகளைப் போற்றுதல் உணர்ந்து, சிவஞான முனிவரர் போன்ற பெருஞ் சான்றோர்களின் நூல்களை நன்கினிது முயன்று பயின்று, தமிழ் மொழியினையும், தமிழ்ச் சமயத்தினையும், தமிழர்தம் உயரிய கடவுட் கொள்கைகளாகிய சைவசித்தாந்தத்தினையும், நாம் தக்கவாறு போற்றி உய்வோமாக!

---

# சங்கற்ப நிராகரணம்

(புலவர் முருகவேள் B.O.L.)

## தோற்றுவாய்

'சங்கற்ப நிராகரணம்' என்பது சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று. சிவப்பிரகாசம் திருவருட்பயன் வினாவெண்பா போற்றிப்பஃறொடை கொடிக்கவி நெஞ்சுவிடுதூது உண்மைநெறி விளக்கம் சங்கற்பநிராகர

[1]"Religion! what a treasure untold,
Resides in that heavenly word;
More precious than silver and gold,
Or all that this world can afford"—
William Cowper.

ணம் என்னும் எட்டுநூல்களும் 'சித்தாந்த அஷ்டகம்' எனப்படும். இவ்வெட்டு நூல்களையும் அருளிச் செய்தவர் சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியர் ஆவர். சாலிவாகன சகாப்தம் 1725 (கி. பி. 1313) இல் ஆனி மாதத்தில், தில்லை அம்பலவாணரது ஆரும் திருவிழாவில், தேர்மண்டபத்தில் "ஓட்டிய சமயத் துறுபொருள் வாதிகள் பலர் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து" ஏறி இருந்தனர். அதுபொழுது அவர்களை நோக்கி "வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந் தொருவன் ஏது இறை அருள்" என வினவினான். அவனுக்கு விடையாக ஆங்கிருந்த பலருள்ளும் மாயாவாதியானவன் எழுந்து தன் சமயக் கொள்கையை எடுத்துக் கூறினான். அதனைக் கண்ட ஐக்கியவாதி அடுத்து எழுந்திருந்து மாயாவாதியின் கொள்கையை மறுத்துரைத்துத் தன் கொள்கையை எடுத்துக் கூறினான். உடனே பக்கலில் இருந்தவன் அதனையும் மறுத்துத் தன் கொள்கையை வற்புறுத்தினான். இங்ஙனமே பலரும் தத்தம் கொள்கையை எடுத்துக் கூறிப் பிறரது கொள்கைகளை மறுத்துரைத்து வழக்குரை நிகழ்த்தினர். அது கண்டு அங்கிருந்த சான்றோர்கள் 'நுங்கள் செயல் அழகிது' என ஓராற்றால் பாராட்ட, அவ்வழக்கீட்டினையே பொருளாகக் கொண்டு, "வாத செற்பை விதண்டையும் ஏதுவும், ஓதும் நால்வகை உவமையும் திகழ்தரத்" தாம் இந்நூலை இயற்றியதாக, இதன் பாயிரத்துள் உமாபதிசிவனார் இயம்புகின்றார்.

'சங்கற்ப நிராகரணம்' என்னும் இந்நூல் சிறந்துயர்ந்த செவ்விய நடையில் அகவற்பாவான் இயன்றுளது. மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம், நிமித்தகாரண பரிணாம வாதம், சைவவாதம் முதலிய பல கொள்கைகளை எடுத்துரைத்து (சங்கற்பம் செய்து), அவற்றின்கணுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அழகுற மறுத்துரைப்பதனால் (நிராகரணம் செய்வதனால்), இந்நூல் இப்பெயர்த்தாயிற்று. இந்நூலைப் பயில்வதனால் மேற்குறித்த சமய வாதிகளின் கொள்கைகள் யாவை என்பதும், அவற்றின் குறைபாடுகள் யாவை என்பதும், இவற்றினையெல்லாம் விடச் சைவசித்தாந்தம் எத்துணையளவுக்கு உயர்ந்த விழுமிய பெருங்கொள்கையாக விளங்குகின்றது



என்பதும், நாம் எளிதில் தெளிவுற அறிந்து உள்ளம் களிதுளும்புகின்றோம். உமாபதிசிவம் ஒருவரே பல்வேறு சமய வாதிகளின் கொள்கைகளையும் சிறந்த முறையிற் சுருங்கிய நிலையில் எடுத்துரைப்பவராகவும், பின்னர் அவற்றைத் திறம்பட மறுத்துரைப்பவராகவும், இருவகை நிலையில் இருந்து இந்நூலைச் செவ்விதின் இயற்றியிருக்கும் சிறப்பு மிகவும் வியக்கற்பாலதாம். தருக்கநெறி சிறிதும் பிறழாது வழக்குரை நிகழ்த்திச் செல்லும் இவ்வரும் பெறல் நூல் நம்மனோர் அறிவிற்குப் பெருவிருந்தாய் அமைந்து திகழ்வதோடு, அதனை நுட்பநிட்பமுறச் செய்யவல்ல சிறந்த பயிற்சியினையும் நமக்கு அளிக்கின்றது. இந்நூலை நன்கு பயின்று கொள்பவர்கள் "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லும்சொல் இன்மை யறிந்து" எனப் புகலும் திருவள்ளுவர் பெருமான் அறிவுரைக்கேற்ப, தம் சொல்லைப் பிறிதோர் சொல் வெல்லும் சொல்லின்மை அறிந்து கூறவல்ல ஆற்றல் பெறுவர் என்பதில் ஐயமில்லை. இன்ன பல நலம் நிறைந்த இச்சிறந்த நூலின்பொருளை எல்லோர்க்கும் இனிதாகவும் எளிதாகவும் விளங்குதற்பொருட்டுச் சுருங்கிய முறையில், இதற்கு ஞானப்பிரகாச தேசிகர் செய்துள்ள உரையினைத் தழீஇ, இயன்றபெற்றி உரைநடையாக்கித் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மாயாவாதி சங்கற்பம்

ஒருகாலும் அழிவில்லாதவனாய், முற்றுணர்வினனாய், குற்றமற்றவனாய், பகுக்கப்படாத முழுமுதல்வனாய், வேற்றுமையில்லாதவனாய், தத்துவங்களைக் கடந்தவனாய், மறைப்பில்லாதவனாய், சொல்லும் பொருள்களுமாகிய நூல்களுள் எதனாலும் அணுகவொண்ணாதவனாய், தூய அறிவின் வடிவனாய், எல்லாத் துன்பங்களும் தானேயாய், துன்பங்கள் தன்னைத் தொடராதவாறு மிக்க தொல்பெருஞ் சுடராய், வரம்பில் வேதச் சிரந்தரு பொருளாக உள்ள பிரமம் இருக்கும்! கரும்பு தன்பால் தோன்றிய சுவையைத் தான் அறியாமைபோல, பிரமமும் தன்பால் நிகழும் இன்பத்தைத் தான் அறியாததாய் விளங்கும்.

பிரமம் உலகத்தைப் படைக்குங்கால், பொன் தானே பல அணிகளாய் இருக்கும் தன்மைபோல, நிலந் தீ நீர்

வெளி விசும்புகளாகவும், பிறவாகவும் இருக்கும். இங்ஙனம் தோன்றிய உலகம் நித்தியமோ? அநித்தியமோ? அநித்தியமென்னில் இது நித்தியமாய்த் தோன்றுவது என்னையெனில்—இப்பியானது வெள்ளியை ஒத்துத் தோன்றுதல் போல, நம்மனோர் மதிமயக்கத்தால் அநித்தியமாயுள்ள பிரபஞ்சமும் நித்தியமாய்த் தோன்றும்.

பிரமமும் உலகமும் தம்மில் வேறோ எனில்—, பிரமமே இவ்வுலகமாயிருக்கும். பிரமத்தைப் போலன்றி உலகம் வேற்றுமையாய் இருப்பதென் எனில்—, சிலந்தியின்பால் தோன்றிய நூலினைப்போல உலகமும் பிரமத்துக்கு வேற்றுமையாய் இருக்கும். 'சிலந்தியின் நூல்போல' என்று சொல்லின் அஃது ஒரு தன்மையாய் இருப்ப, உலகம் பல விதமாய் உளதே எனில்—, மரமானது இலையும் பழமும் பூவுங்காயும் தோலும் நாரும் வைரமும் எனப் பலவாக இருப்பது போலவும், நீரானது திரையும் நுரையும் திவலையும் குமிழியும் எனப் பலவகையாக இருப்பது போலவும், உலகமும் பலவகையாகக் காணப்படும்.

அறிவில்லாத அசித்தை அறிவாகிய சித்து உதவாது எனில்—நெல்லானது பதரையும் வைக்கோலையும் தந்த தன்மைபோல, சித்தாகிய பிரமமும் சடமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும். பிரமம் இங்ஙனம் செய்யவேண்டுவதென்னை யெனில்—பிரமத்திற்கு இயல்பு என்றும், விளையாட்டு என்றும் இருவகை நிலைகள் உண்டென மறைகள் மொழியும்.

உபாதிகள் (துன்பங்கள்) பலவாதல் போலப் பிரமமும் பலவாக இருக்குமோ எனில் — மணிகள் பல நிறமாயினும் அவற்றை இணைக்கும் நூல் ஒரு தன்மையாய் இருந்தாற் போலவும், பசுக்கள் பல நிறமாய் இருப்பினும் அவற்றின் பால் ஒரு நிறமாய் இருந்தாற்போலவும், நீர்நிறைந்த குடங்கள் பலவாய் இருந்தனவேனும் அவற்றிற் றோன்றும் ஞாயிறு ஒன்றாதல் போலவும், கிணறு கடல் குளம் குழி வாய்க்கால் வாவி இவைகளெல்லாம் பலவகையாய் இருந்தாலும் அவற்றின் தண்ணீர் ஒன்றாய் இருந்தாற்போலவும், யோனி (பிறப்பு)கள் பலவாயினும் அறிவாகிய பிரமம் ஒன்றாய் அவ்வப் பிறவிகள் தோறும் கூடியிருக்கும்.



பிறவிகள் தோறும் அறிவாகிய பிரமம் கூடியிருப்பின் அது கட்டுநிலை பெறாதோ எனில்—கண்ணாடியில் நிழலானது தோன்றிநின்றாலும் அதன்கண் அது கட்டற்றுத் தோய்வற நின்றாற்போல, உடலின்கண் பிரமம் தோன்றி நின்றாலும் அது கட்டற்றே தோய்வற நிற்கும். பிரமமாகிய அறிவு தோய்வற நின்றால் உடல் இயங்குவது எவ்வாறு எனில்—காந்தமானது தோய்வற நிற்க அதன் முன்னிலையில் இரும்பு தொழிற்படுதல் போல, பிரமத்தின் சந்நிதியில் உலகம் தொழிற்படும். பிரமமும் உடலில் நின்று இன்ப துன்பங்களை நுகருவதென்னை யெனில்—கனவிற் கண்ட புலியும், இரவிற் பழுதையைப் பாம்பென மயங்கிய மயக்கமும், பேய்த்தேரும் போலப் பிரமமும் உடலோடு கூடி இன்ப துன்பங்களை நுகர்தல் வெறும் தோற்றமாத்திரையேயன்றி உண்மையாவதன்று! கண்கூடாக ஐம்புலன்களோடு கூடிக் கன்மங்களை நுகர்தல் காணப்படுகின்றதே எனில்—பளிங்கானது பலநிறங்களோடு கூடியிருப்பினும் அவற்றின் வேறாதல் போல, புலன்களோடு கூடியிருக்கும் பிரமமும் அவற்றின் வேறெனத் தொடர்பற்று நிற்கும். சாக்கிரம் சொப்பனம் முதலிய அவத்தைகளை அறிவானது நாடோறும் அனுபவியா நின்றாலும், நல்வினை தீவினைத் தொடர்புகள் பிரமத்தைச் சாரமாட்டா. அஃது எதுபோல எனில்—கண்ணாடியிலே ஒருவன் முகம் தோன்றியபொழுது, அங்ஙனம் தோன்றிய நிழலாகிய முகத்திலுள்ள கண்களிற் பாறைகொண்டு தாக்கியவழி, அக்கண்ணாடி உடைவதல்லது உண்மையிற் கண்களுக்கு ஊறு நேராமைபோல என்பது.

இங்ஙனம் மாயாவுபாதிகளால் உண்டாகிய பிறவித் தொடர்பு நீங்குவது எங்ஙனம் எனில்—வானத்தில் தோன்றிய மேகத்தை வாயுவானது நீக்குவதுபோல, பிரமத்திற்கு உண்டாய மறைப்புக்களையெல்லாம் விவேகஞானமானது நீக்கும். விவேகஞானமும் பிரமமும் வேறோ எனில்—வேறன்று. யாங்ஙனமெனில், வானத்திற் சூழ்ந்த மேகங்களை நீக்குவது அவ்வானத்திற் பிறந்த வாயுவே யாதல் போல, பிரமத்திற் குண்டாகிய மறைப்புக்களை நீக்குவதும் அப்பிரமத்தினின்று தோன்றும் விவேகஞானமேயாதலின் வேறன்று என்பதாம். அற்றேல், பிரமத்தின் மறைப்புக்களை விவேகஞானம் நீக்குவது எவ்வாறு எனில்—ஒரொரு

வைக்கோலாகவும் ஓலையாகவும் கழியாகவும் பறித்துப் போட்டவழி வீடு என்னும் உருவம் இல்லையாகப் போயின தன்மைபோலவும், ஒரொரு இழையாகப் பிரித்துவிட்ட பின்பு ஆடையின் உருவம் அழிந்தொழிந்த தன்மை போலவும், பிரபஞ்சமாகிய பொய்மையையும் மண் முதலிய தத்துவங்களாகக் கண்டு, இது நான் அல்ல இது நான் அல்ல என மறுத்துக் கழித்துக் கொண்டே சென்ற வழி, பிரமத்தின் மறைப்புக்களெல்லாம் விவேகஞானத்தால் நீங்கும்.

மறைப்புக்களை யெல்லாம் நீக்கிய விவேகஞானம் பின்னர் யாது செய்யும் எனில்—மறைப்பு நீங்கிய பிரமப் பொருள் தன்னின் வேறன்றித் தானேயாய்த், தன்னிடத்தில் தன்னியல்பைத் தானே கண்டுணர்ந்து, தன் இன்பத்தைத் தானே நுகர்ந்து, 'தத்துவமசி பதம்' என்னும் மகா வாக்கியத்தில் தெளிவு கொண்டு, 'அந்தப் பிரமம் நான் ஆனேன்' என்னும் பிரமஞானத்தைத் தெளிய விளங்கிப் பின்னர்ச் சலனமின்றி இருக்கும். 'சுவையொளி யூறோசை நாற்றம்' முதலிய நுகர்பொருள்களைத் துய்க்கும்போதும் அவற்றிற்குச் சலனம் (அசைவு) இல்லை என்றது எவ்வாறெனில்—நீரானது அசைந்தவழி அதன்கண் தோன்றும் சந்திரன் அசைந்ததாயினும் அதனால் வானத்துள்ள சந்திரன் அசைவுறாதது போலாம் என்பது. உடற்பற்று விட்டநிலையில் அறிவும் பிரமமும் தம்மில் ஒன்று சேர்ந்தமை யாங்ஙனம் எனில்—குடத்துக்குள் அடைபட்டு நின்ற காற்று, குடம் உடைந்தவழி வான்வெளியிற் சென்று கலந்து ஒன்றுபட்டாற்போல என்பது.

'அது நான் ஆனேன்' என்னும் பிரமஞானத்தை யறிந்து தாம் முன்பு செய்துவந்த கன்மங்களை யெல்லாம் விடமாட்டாத அறிவிலிகள், அந்தப் பிரமஞானம் உண்டாதற் பொருட்டுச் சாதன சதுட்டமாகிய கன்மங்களைக் கடைப்பிடித்து ஒழுகிவர, விவேகஞானம் உண்டாகும். அவ்விவேகஞானம், தீக்கடை கோலினின்று பிறந்த தீ அகணையும் சேர எரித்தல் போல, கன்மங்கள் எல்லாவற்றையும் அழித்தொழிக்கும். அவ்விவேக ஞானநிலையின் வேறாக முத்திப்பேறு ஒன்றில்லை. அதுவே முத்தியாகும் என்று மாயாவாதி எடுத்துரைத்தான். (தொடரும்)

6. ஆராய்ச்சிப் பகுதி

# மணிமுடிச்சோழன்

(மா. சிவகுருநாத பிள்ளை)

எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய சிவபெருமானைத் தென்னாடுடைச் சிவனாய்ச் செய்த பெருமை தென்னாட்டுத் தமிழ்மன்னர்களுக்கே உரியதாகும். அதில் சிறப்பாய் அப்பெருமைக்குரியோர் சோழமன்னர்களே யாவர்.

ஒவ்வோர் காலத்தும் ஏற்பட்ட மாறுதலால் சிற்சில மன்னர்கள் சிவநெறியை மறந்து வேற்றுச் சமய நெறியைக் கைக்கொண்ட காலத்தும் இச்சோழ மன்னர்கள் சிவநெறியினின்றும் மாறியவர் அல்லர். (சேரரில் செங்குட்டுவன் தம்பி இளங்கோவும், பாண்டியரில் நெடுமாறனும், பல்லவரில் மகேந்திரவர்மனும் சமண்சமயம் புகுந்துள்ளனர். கி. பி. 765-790 வரை ஆண்ட பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன் வைணவபக்தனாக இருந்துள்ளான்) இதுபோல் சோழமன்னர் எவரும் மாறாது இருந்ததில் இருந்தும், தம் நாட்டில் பார்க்குமிடமெங்கும் குன்றவில்லியாருக்குக் குன்றமன்ன பலகோயில்களை எடுத்துள்ளதில் இருந்தும், சைவத் திருமுறைகளை வகுத்த திருத்தொண்டிலிருந்தும் இவர்களது சைவப்பணி நன்கு விளங்கும்.

இத்தகைய இவர்களது பணியைப் பெருமன்னர்களாய் வாழ்ந்த காலத்து மட்டுமின்றி, பிறமன்னரால் தம் சிறப்பு, வலிகுன்றிய காலத்தும் குன்றவிட்டாரில்லை. அத்தகைய நெறிநின்ற சோழமன்னர்களுள் மணிமுடிச் சோழன் ஒருவன். இவன் எக்காலத்தவன் எனவும், இவனது போற்றற்குரிய சிவப்பணிகள் எவை எனவும் காண்பாம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடபக்கம் பல்லவர்களது பலத்தாலும் தெற்கில் பாண்டியரது பலத்தாலும் அதற்கு முன்னமேயே களப்பிரரால் வலிகுன்றியிருந்த சோழமன்னர்கள் மிகவலிகுன்றி ஒடுங்கிய நிலையில் இருந்தனர். அதுபோது அவர்கள் யாண்டு இருந்தனர் என்பதை அறியச் சான்றுகள் வரலாறுகள் பலவற்

றில் காணப்பட இல்லையெனினும் திருநாவுக்கரசர் வரலாற்றினால் (பெரியபுராணத்தால்) ஒருவாறு அறியலாகும்.

திருமறைக்காட்டினின்றும் சம்பந்தர் அமணரை வாதில்வெல்ல மதுரைக்குப் புறப்பட்டபின் உடன் இருந்த நாவுக்கரசர் நாலகவீழி, ஆவடுதுறை முதலிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு பழையாறையை* வந்தடைந்தார். அங்கு வடதளி என்னும் ஆலயத்துச் சிவலிங்கத்தை அமணர்கள் மறைப்பிக்க அதனைத் தரிசியாது உண்பதில்லை என அப்பர் உறுதிகொண்டார். அப்போது இந்நிகழ்ச்சியை இறைவன் அரசனுக்குக் கனவில் கூற உடன் அவ்வரசன் அங்குவந்து அமணர்களை விரட்டி அப்பரின் எண்ணம் நிறைவேறச் செய்தான்.

இவ்வாறு செய்த மன்னன் யார்? பழையாறை என்பது சோழமன்னர்களது திருவுடை நகரங்களில் ஒன்றாகும். ஆதலின் அங்கோர் சோழமன்னன் மிகவலி குன்றிய நிலையில் இருந்திருக்கவேண்டும். இந்த காலத்து நின்றசீர் நெடுமாறனின் தேவி மங்கையர்க்கரசி ஓர் வளவர்கோன் பாவை (சோழன் மகள்) என அறிவாம். ஆகவே, இவ்வரசியை ஈன்றெடுத்த ஓர் சோழமன்னன் தான் இவன் எனல்வேண்டும். வேறு அப்பழையாறையில், அதன் மருங்கில் ஓர் சைவ நெறியையுடைய மன்னர்கள் யாருமில்லை. பாண்டியனும் அமண்நெறியில் இருந்துள்ளான். இத்தகைய மன்னன் மகளாகிய மங்கையர்க்கரசியாரை ஞான சம்பந்தர் '...மண்ணெலாம் மன்ன மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன்றன் மகளாம் பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி ..(3. 120. 9) என்றார். இதில் இருந்து வடதளியில் இலிங்கத்தை மீட்ட மன்னன் 'மணிமுடிச்சோழனே' ஆவான் எனலாகும்.

வடதளியில் இலிங்கத்தை மீட்ட இவ்வளவன் திருப்பனந்தாளில் சாய்ந்த இலிங்கமொன்றை நிமிர்க்கும் பணியில் ஈடுபட்டு அதிலும் வெற்றி கண்டான். அறுபான் மூவருள் ஒருவர் குங்கிலியக்கலயநாயனார். இவர், சம்பந்தர்

*கும்பகோணத்திற்குத் தெற்கில் 3 கல்லில் உள்ள பழமையான நகரம். இப்போது தன் பொலிவிழந்து பல சிறு கிராமங்களாய் உளது.



அப்பர் காலத்தவர். திருப்பனந்தாளில் முன் ஒரு சமயம் தாடகை என்னும் (இராமாயணத்தில் வரும் அரக்கியன்று) பெண் ஒருத்தியின் பூமாலையை ஏற்கச் சாய்ந்த இலிங்கமானது பின் அவ்வண்ணமே இருந்தது. இதனை இம்மன்னன் நிமிர்க்க யானைகளைக்கொண்டு இழுப்பித்தும் முடியாதிருந்தபோது, குங்கிலியக்கலயர் அங்குவந்து இலிங்கத்தின்மீது இருந்த கயிற்றின் மற்றோர் நுனியைத் தம் கழுத்தில் கட்டி இழுப்பித்து மன்னவன் மனம் அமைதியடையச் செய்தார். இம்மன்னனும் பழையாறையில் இருந்த மணிமுடிச்சோழனே யாவான். இத்துடன் இவன் பணிநின்ற தன்றிப் பாண்டியில் அமண் பெருக்கைத் தன் மகளாகிய மங்கையர்க்கரசியாரைப் பாண்டிமாதேவியாக்கி அதனை (சமணை) ஒழிப்பித்ததும் பெருஞ்சைவப் பணியன்றோ?

இவ்வாறு அரசு வலிகுன்றிய காலத்தும் சமயவலி குன்றாது பணிபுரிந்த மணிமுடிச் சோழனது சிவநெறி அன்னோரது வழிவழிச் சைவ நெறியன்றோ! இத்தகைய பெருங்குடி மன்னர்கள் எடுப்பித்த குன்றமன்ன பல பெருங்கோயில்கள் தற்போது இடிந்து விழுவது நம் நாட்டைப் பிடித்துள்ள பெரும்பீழையே யாகும். இதனை மக்கள் தமக்குற்ற பெருங்குறைகளின் முதலாவதாகக் கொண்டு அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவதோடன்றித் தம்மாலான சிறுபணியாலும் (மேலும் சிதையாது) செய்தல் வேண்டும்.

சிலகாலம் முன்வரை செட்டிநாட்டுப் பெருமக்கள் (அச் சோழமன்னரே மீண்டும் பிறந்துவந்ததுபோல்) இக்கோயில்களில் பலவற்றைப் புதுப்பித்துக் குபேரனுங் கண்டு வியக்கும் பெருவாழ்வு பெற்றனர். அன்னவர்கள் மீண்டும் இப்பணியை இக்காலத்து மேற்கொண்டாராயின் கோயில்களும் சிறப்புற்று முன்னினும் அவர்கள் பெருவாழ்வு அடைவர்.

இத்தகைய நிலை சோழர் காலப் பணிபோன்று மிளிர இறைவன் திருவருளை வேண்டுவோமாக.

## 7. வரலாற்றுப் பகுதி

# தோபா சுவாமிகள்

(திருவண்ணாமலை, அ. நா. ப. திருஞானசம்பந்தன்)

### தோற்றுவாய்

“நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே” என்றருளினர் ஔவைப் பிராட்டி. அதோடமையாது “நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை” என்றும் அருளியுள்ளார். நல்லார் என்பது யாரைக் குறிக்கிறது? என்கிற ஐய வினா உடனே உள்ளத்தில் எழத்தான் செய்கிறது. இதற்கு அவ்வவர் நூலறிவிற்கும், அநுபவத்திற்கும் ஏற்றாற்போலப் பொருள் கண்டுரைப்பர். உலகியலை நன்காய்ந்து முடிவுகட்டியுள்ள தெய்வப்புலவர் வள்ளுவரிடம் சென்றால் நல்லார் என்பதற்குத் தெள்ளிதின் பொருள் உணரலாம். ஒரு பெருமகனுக்கு, பல்கலை ஆய்வும், தொன்னூல் உணர்வும், சொல்லாற்றலும், கட்டுரைவன்மையும் உளதெனக் கொள்வோம். இவ்வளவும் இருந்தும், அவரிடம் ஒழுக்கம் மட்டும் சிறிது குன்றியுளதென்றால், வள்ளுவர் தயாரிக்கும் பட்டியலுக்கு அவர் அருகராகார். வள்ளுவர் அத்தகையோர்களை ஒதுக்கி, ஓரறிவுயிராகவே மதிப்பார். கற்றறிந்தவர் வாய்ச்சொல் வழியாக உலகம் நடப்பதில்லை; நடப்பதையும் அறிஞரானோர் விரும்புவதில்லை. கற்றறிந்தோர் தங்கள் பிழைப்பு நன்முறையில் நடக்கவேண்டுமென்று கருதி மற்றோரைக் கைப்பொம்மையாக்கவே என்றும் முயன்றனர்; முயல்கின்றனர். கற்றதோடமையாது ஒழுக்க வழி நிற்கும் சிறந்த தோன்றல்களின் வாய்ச்சொற்களால்தான் உலகம் நடைபெறுகிறது என்பது அசைக்கமுடியாத கருத்து. ஒழுக்கவழி நின்றோர் வாய்ச்சொல்தான், கேட்போர் மனத்தில் ஆழப் பதியும் என்பது உளநூல் வல்லாரின் முடிபும் ஆகும்.

வழுக்குதலையுடைய சேற்று நிலத்தில் நடப்பவர்களுக்கு ஊன்றுகோலெப்படி யுதவிசெய்யுமோ, அப்படியே



மனத்தளர்ச்சியுடையவர்களுக்கு, அத்தளர்ச்சியை நீக்கிக் கொள்ள ஒழுக்முடையார் வாயினின்றும் வரும் சொற்கள் உதவி செய்யும். ஆதலால் அச்சொற்களைக் கேட்க வேண்டும் என்பதாம்.

“இழுக்கலுடை யுழி யூற்றுக் கோலற்றே
யொழுக்கமுடையார் வாய்ச் சொல். —குறள்-கேள்வி 5.

அப்பழுக்கற்றுச் சான்ற ஒழுக்கத்துடன்வாழும் பெரும்பேற்றைப் பெற்றவர்கள் தூய துறவிகளேயாவர். உலகிலுள்ள, ஏனையோர் யாதானுமோர் காரணத்தால் ஒழுக்கங் குன்றி நடக்க நேரினும் நேரலாம். விருப்பு வெறுப்பு அற்றார்க்கே நற்றவ வாழ்வுநடத்த இயலும். அவர்கள் திருவாயினின்றும் முகிழ்க்கும் சொற்களே நிறைமொழிகள். அவைகள் என்றும் நிலைபேறுடையன. அத்தகைய துறவின் பெருமையை திருமூலர் வாக்கால் கண்டு அகமகிழ்க!

துறந்துபுக் கொள்ளொளி சோதியைக் கண்டு
பறந்ததென் னுள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறியா வென்னை வானவர் கோனு
மிறந்து பிறவாம லீங்குவைத் தானே.

—திருமூலர் எட்டாந் தந்திரம்-18

எண்ணிறந்த தூய தவமுனிவோர்கள் தோன்றித் தண்டமிழ் நாட்டைப் புனிதமாக்கினர். அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, தவமுதாளர்கள் தோன்றி, அப்போதைக்கப்போது மக்கள் உள்ளத்தில் நிலவும் அறியாமையைக் கடிந்து, அறிவை நிரப்பி வளர்த்து வருகிறார்கள். அங்ஙனம் ஒரு ஞானவாரிதியாகத் தோன்றி, மக்களை உய்வித்த “தோபா சுவாமிகள்” வரலாற்றை இனிக் காண்போம்.

### வரலாறு

“சோழவளநாடு சோறுடைத்து” என்பாள் தமிழ்ப்பாட்டி. அவ் வளநாட்டிலே திரிசிரபுரம் என்னும் நகரத்தில், தாளாண்மை பூண்ட வேளாண் குடியில் சிவகுருநாத பிள்ளை என்பார் தோன்றினர். பெயருக்கேற்ப,

அவத்தைப் போக்கிச் சிவத்தைப் பேணியும், தமிழின்பால் அயராத பற்றுக்கொண்டும் வாழ்ந்துவரலானார். இப்பெருமகனார்க்கு மணம்முடிந்த பிறகு, ஆங்கிலக் கும்பெனியாரின் சேனையில் படைக்கலப் பயிற்சிசெய்து அதனால் வரும் பொருளால் இனிது வாழ்ந்துகொண்டிருந்தனர். இங்ஙனம் வாழ்ந்து வருங்கால், சில ஆண்மக்களையும், பெண்மக்களையும் பெற்றெடுத்தனர்.

பின்னர், சிவகுருநாதரும், அவர்தம் மனைவியாரும் திருத்தல யாத்திரைமேற்கொண்டு, இராமேச்சுரம் சென்று தீர்த்தமாடி ஊர்திரும்பிய பின்னர், சின்னாட்கள் கழித்து, ஒரு ஆண்மகவைப் பெற்றனர். குழந்தை கருவிலேயே திருவுடையதாகப் பிறந்தது. குழந்தை இயம்புதற்கரிய அளவில் அழகுடையதாயும், அதன் முகத்தை நோக்குழி, ஞானப் பொலிவிற்கு இடமானதாயும் இருந்ததை எண்ணி அளப்பரும் இன்பக்கடலில் ஆழ்ந்தனர். இராமேச்சுரம் சென்றுவந்த பின்னர் இக்குழந்தை தோன்றியமையால், "இராமலிங்கம்" என்று பெயரிட்டனர். இக் குழந்தையின் கல்வியறிவு, அருளுடையார் ஆசி போலவும், வளர்பிறையொத்தும் திகழ்ந்தது. அவர் கல்வியில் தேறியதை ஒரு பாவாயிலாய்க் காண்க.

> கற்றவன் கல்வியைக் கனவினில் மறந்தபின்
> உற்றிடு நனவினி லுணர்ந்துகொள் தன்மையில்
> பெற்றவர் குரவர்கள் பெரிதுமன் வியப்புற
> முற்றவக் கல்விகள் முழுதையும் கற்றனன்.

தாய்தந்தையர் வியக்கும் வண்ணம், முற்றவத்தின் பயன் கூடியமையால், அவர் கல்வி செழித்து வளர்வதாயிற்று. இத்தகு சான்ற இராமலிங்கம் தான், பிற்றை நாளில் "தோபா சுவாமிகள்" என்று பல்லோராலும் வியந்து குருவெனப் பாராட்டும் பெருமையை எய்தியவர் என்பது ஈண்டு நினைவிற் கொள்ளற்பாலது.

## இளமை வாழ்வு

கல்வியின் தேர்ச்சி பெற்று, அறிவெனும் சிகரத்தில், அகமனம் ஆட்சி செலுத்தும் தறுவாயில், தாயும்-தந்தையும்



இறைவன் இணையடி நீழலெய்தினர். தாய்தந்தையரை நீத்ததற்காக, இளமை உள்ளத்தில் நைவொன்றும் தோன்றிலது. இளைஞன் உற்ற ஆதரிப்பற்ற நிலையைக் கண்ட துரைத்தனத்தார் காலாட் படையில் உள்ள மக்களுடன் இச்சிறுவனையும் சேர்த்து வைத்து, அன்போடு வளர்த்து வந்ததுடன் படைக்கலப் பயிற்சியை இவருக்கும் பயிற்றுவித்தனர். நாளா வட்டத்தில் நல்ல போர்த் தொழில் வல்லுநரானார். இவர் தந்தை பணியாற்றி வந்த இடத்தில் இச்சிறுவரை அமர்த்தினர். இப் பெருந்தகையார் புறத்தே போர்த்தொழில் பூண்டு வந்தாரெனினும் அகத்தே வளர்ந்து நின்று பரவி வரும் அஞ்ஞான இருளை அழித்தல் யாங்ஙனம் என்பது பற்றியே சிந்தித்து வருவாராயினர். இங்ஙனம் சிந்திக்க, சிந்திக்க நல்லுணர்வு பெருகி வளர்வதாயிற்று. அதுமுதற் கொண்டு, ஆத்ம விசாரணையில் ஈடுபட்டு உண்மையுள்ளத்தில் உள்ள உயர் பொருளைப் பற்றி ஆயத்தலைப்பட்டார்.

## திருமறைகள்பால் பற்று

தேறிய மனத்துடன் விளங்கிய இராமலிங்கர் திருமுறைகள் ஓதுவதில் ஈடுபடலானார். பவப்பகை போக்க வழி தேடிக்கொண்டிருக்குங் காலை, தமிழ் மறைமொழிகளே தொன்மைச் சிறப்புடையன என்பதை அறிந்தார். இங்ஙனம் அறிந்து திருமறைகள் ஓதிவருங்கால், பரசமய கோளரியான ஞானசம்பந்தர் பெருமான்பால் வெகுவாக ஈடுபாடுகொண்டு, அவர் அருளிய தேவாரப் பாடல்களையே பாடிப் பாடிப் பரவசமடையலானார். ஞானசம்பந்தரின் பெருமையை ஈண்டோர் பாவாயிலாக நோக்குக.

> "யாவருக்கும் தந்தைதாய் எனுமிவரிப் படியளித்தார்
> ஆவதனால் ஆளுடைய பிள்ளையா ராயகில
> தேவருக்கும் முனிவருக்குந் தெரிவரிய பொருளாகும்
> தாவில்தனிச் சிவஞான சம்பந்த ராயினார்.

ஞானசம்பந்தர் பெருமான்பால் இடையறாத பற்றுள்ளங் கொண்டொழுகியமையால் இராமலிங்கருக்கு அப்பெருமான் அருள் எளிதில் கிட்டிற்று. அவர்

[library stamp]

கிட்டிய நாள் தொட்டு ஞான நிட்டையும் பெருகி வளர்வதாயிற்று. நாம் பெரிய புராண அடியார்களைக் காணுங்கால், சிவலிங்கத்தால் உய்வு பெற்றவர்களென்றும், அடியார்களுக்குத் தொண்டு செய்து உய்வுபெற்றவர்களென்றும், இருபகுப்பைக் காண்கின்றோம். திருநாவுக்கரசரின் திருப்பெயரைச் சிந்தித்தே, அப்பூதியடிகள் இறைவன் அருள் நிலைக்கு உரியரானார் என்பதைப் பெரிய புராணத்தில் அறிகிறோம். அஃதேபோல், ஈண்டு காழிவேந்தனின் திருநாமத்தை அவன் அருளிய பாடல்களை இடையறாது ஓதி அவன் அருளுக்கு அதன்மூலம் உரியரானார் இராமலிங்கர் (பின்னர் தோபா) என்பது அறியத்தக்கது.

## படைக்கலப் பயிற்சியில் இறைவன்

இராமலிங்கர் ஞான நிட்டையிலிருந்து, வெளிவந்ததும், ''தோ-பா'' ''தோ-பா'' என்று கூறிக்கொண்டிருந்தார். இது ''தோ'' தோவை முதலாகக் கொண்ட (தோடுடைய செவியன்) (பா-பாடலை) பாடத் தொடங்கிய ஞான சம்பந்தர் பெருமானின் அருளை நினைவிற் கொள்ளும் முகத்தான் இங்ஙனம் கூறிவந்தனர்போலும். இது முதற் கொண்டு பிள்ளைத் திருநாமமான இராமலிங்கம் என்பது வழக்கில் ஒதுங்கி, தோ-பா சுவாமிகள் என்று வழங்குவதாயிற்று.

ஞானநிட்டை கூடுவதையே தன்வாழ்வின் பயன் என்பதை உணர்ந்து, அதன் வழி நடக்கலானார் தோபா சுவாமிகள். ஒருநாள் படைக்கலப் பயிற்சி செய்ய வேண்டியநேரம் அணுகிற்று. இறைவன் அருட்பேற்றில் திளைத்திருந்த சுவாமிகளுக்குத் தான் சென்று மேற்கொள்ள வேண்டிய தொழிலின்பால் நினைவற்றவராகவே யிருந்தார். '' இறையோ தொண்டருள்ளத்து ஒடுக்கம் '' என்பது ஔவை வாக்கல்லவா? தொண்டனுக் கடக்கமான இறைவன், தன் தொண்டன் செய்ய வேண்டிய செயலைத் தானே செய்யமுந்தினார். இறைவனே சுவாமிகள் (தோபா) உருக்கொண்டு, குதிரையேறிப் படைக்கலப் பயிற்சியில் ஈடுபடலானார். வேலை முடிந்தது. உடனே குதிரையை விட்டுச் சென்ற விடம் தெரியாது மாயமாய் மறைந்தார். அங்-



கிருந்த எல்லோரும் பெரு வியப்புற்றனர். அப்படைக்கலப் பயிற்சிக்குத் தலைவனான ஆங்கிலத் துரைமகனுக்குச் சுவாமிகள் இருக்கும் இடம் சென்று அவரைக்காண வேண்டும் என்ற அவா எழுந்தது. சில்லோருடன் ஆங்கிலேயன், சுவாமிகளின் இருப்பிடம் சார்ந்தான். அனைவரும் அங்குச்சென்று காணுங்கால் சுவாமிகள் நிட்டையில் இருப்பதைக் கண்டனர். தன்னுடன் வந்தவர்களில் ஒருவனை யழைத்து. '' தான் வந்திருப்பதாகச் சுவாமிகளிடம் கூறும்படிச்'' சொன்னான். அந்த ஏவலாளன் சுவாமிகளிடம் சென்று பலத்தகுரலில் '' துரைமகனார் தங்களைக் காண வந்திருக்கிறார் '' என்றான். சுவாமிகள் இதைக் கேட்டு அசைந்தாரா என்ன? இல்லவேயில்லை! நினைவும், உயிரும் ஒரு பெரும் பொருளிடத்தில் பற்றுக்கொண்டு விளங்கும்பொழுது, அற்பர்கள் எவ்வளவு பலத்தகுரலில் கூப்பிடினும் கேட்குமோ? சுவாமிகள் நிட்டை கலையும் வரை அங்கேயே இருக்கவேண்டும் என்று முடிவு செய்தான் துரைமகன். சிறிது நேரம் கழித்துச் சுவாமிகளின் நிட்டை கலைந்தது. சுவாமிகளின் பாதத்தில் குப்புற வீழ்ந்து, அருளைப் பெற்றான் துரைமகன். அன்றியும் சுவாமிகளே, கடவுளின் பேரன்புள்ள உண்மைத் தொண்டரெனத் துணிந்து, '' கடவுளே ஒரு திருமேனி கொண்டு இவர்போல் நமது போர்த்தொழிற் களத்தில் வந்து படைக்கலப்பயிற்சி செய்து மறைந்தருளினரேயன்றி வேறொருவரும் அல்லர் '' என்பதை யறிந்து, சுவாமிகளைப் போற்றினான்! நிட்டை கலைந்த பிறகு தோபா சுவாமிகளிடம் அன்று படைக்கலப் பயிற்சியில் நடந்த நிகழ்ச்சியைக் கூறினர் நண்பர்கள். அதைக் கேட்டு இன்புற்றார் தோபா. இனி, தனக்கு ஏற்ற வாழ்வு துறவே என்றெண்ணி அகத்துறவும், புறத்துறவும் கொண்டார் சுவாமிகள்.

## சித்து விளையாட்டு

எவ்வளவோ சித்து விளையாடல்கள் புரிந்தார் தோபா. ஞானப் பெரியார்களுக்கு, சித்து விளையாடல் என்பது ஒரு சிறிய செய்கைதான். நம்போல்பவருக்கு, அதைக்காண மலைப்புத் தோன்றும். அவர் நிகழ்த்திய சித்து விளையாடல் ஒன்றை ஈண்டுக் காண்போம். உண்மை ஞானம்

கைவரப் பெற்றவர்கள் நாய்போல் அலைந்து நிற்பர்; பேய் போல் திரிந்து நிற்பர் என்பார் பட்டினத்தார் தம்பாடல் ஒன்றில். சிவஞானத்தின் விளைவால் மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற தோபா சுவாமிகள் உடை கோவணமின்றி, சிறு பிள்ளை யொத்துத் தெருவில் திரிந்து, அலைந்து வருவா ராயினர். இன்னணம் இருக்குநாளில், ஒருநாள், மகம்மதியர்கள் வாழும் தெருவழியாகச் சென்று கொண்டிருந் தார் சுவாமிகள். அது போழ்து, செல்வம் மிகுந்த மகம்மதியனுடைய மனைவி, இவர் செயலைக் கண்டு பொறாளாகி, தன் கணவனிடம் "வெறியனைத் தெருவுக்கு வெளியே ஓட்டுவீர்களாக!" எனலும், உடனே மக்களை உய்விக்க வந்தவர்தான் சுவாமிகள் என்பதை உணராத மூர்க்கன் சுவாமிகளைச் சினந்தான். உடனே ஒரு ஏவலாளனை அழைத்து "இவ்வெறியனை வெளியில் துரத்துவாயாக" எனலும், உடனே அந்த அறிவிலி ஒரு கோணி ஊசியை எடுத்து சுவாமிகளின் குறியில் படுமாறு எறிந்தான். அவ்வூசி சுவாமிகளை யொன்றும் செய்யவில்லை. அதற்கு மாறாக, ஏவிய மகம்மதியனுடைய உடலையே அவ்வூசி ஊறு செய்தது. உடனே அம்மகம்மதியன் ஓவென்றலறினான். பெரியார்க்குச் செய்த தீங்குதான் தன்னை வாட்டுகிறது என்ற உண்மையை உணரலானான். அப்பெரியாருடைய காலில், அடியற்ற மரம்போல் வீழ்ந்தான். தன்னை மன்னித்து விடுமாறு மன்றாடினான். சிறியோர் செய்யும் பெருந் தவற்றையும், பெரியராயினோர் இயல்பாகவே பொறுத்துக்கொள்வர். நாய் மனிதனைக் கடித்துத் துன்புறுத்தி விடுகிறது? அதற்குமாறாக மனிதன் தன்னைக் கடித்த நாயைத் திருப்பிக் கடிப்பதில்லை! அம்மகம்மதியன் வேண்டுகோட்கிணங்கி, அருட்பார்வையை அன்பால் கணித்தருளினார். அவ்வூசி வெளியிற் கழன்றதோடன்றி, நோயும் நீங்கிற்று. இந்த நிகழ்ச்சி சென்னையிலேயே நடைபெற்றது.

## தோபா மசூதி

சுவாமிகளின் திருவருள் நோக்கு, அம்மகம்மதியன் பால்பட்டதிலிருந்து, அவன் புனிதமடைந்தான். சுவாமிகள் தன் குலத்தை உய்விக்க வந்த குரு என்று ஏற்றிப்போற்றி



னான். அழகு வாய்ந்த மசூதியொன்றைத் தோபாவின் பெயரில் எடுத்தான். அம்மசூதி இன்றுகாறும் தோபா மசூதி எனவே சென்னையில் இருந்து வருவது காணத் தகுந்ததும், குறிப்பிடத் தகுந்ததுமாகும். துறந்தாரின் பெருமையை என்னென்றுரைப்பது? ஒரு மதத்தில் ஒரு பெரியார் தோன்றினும், அவரே வேற்று மதத்தில் உள்ளார்க்கும் அருட்குருவாய் விளங்குவார் என்னில் அதன் பெருமை எண்ணி வாய்விட்டுச் சொல்ல இயலுமோ? பெரும்பாலான மகம்மதியர்கள் தோபாவை சிறந்த மகான், மக்களை உய்விக்க வந்த பெரியார் என்று வாயாரப் பேசிப் பயன் அடைகிறார்கள் என்னில் சுவாமிகளின் சிறப்பு எவ்வளவு என்பதை அறிக!

## சென்னையில் சுவாமிகள்

சென்னையிலேயே, சுவாமிகள் இருந்து வந்தது பலருக்கும் இடையூறாகவே தென்பட்டது. ஒரு அதிகாரியொருவர், சுவாமிகளைச் சென்னையினின்றும் அழைத்துச் சென்று ஒரு கிராமத்திலேனும் விட்டிடுதல் நலம் என்றெண்ணிச் சுவாமிகளிடம் சென்று முறையிட்டார். சுவாமிகளும் அதற்கிசைந்தார். ஒரு வண்டியில் சுவாமிகளை ஏற்றி, சிலர் பின்தொடர்ந்தனர். செங்கல்பட்டு வழியாக, காஞ்சிமாநகர் எய்தினர். பலமுதுபெரும் புலவர்களை ஈன்றதும், உமையம்மை இறைவன் இடப்பாகம்பெற நற்றவம்புரிந்ததுமான காஞ்சிமா வளநகர் எய்தியாய் விட்டது என்று சுவாமிகளிடம் கூற, சுவாமிகள் அதுகேட்டு மௌனமாயிருந்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டனர். புறப்பட்டு வேலூர் வந்தடைந்தனர். "இங்குதான் பல தவமுதாளர்கள் இருந்து நற்றவம் புரிந்ததும், வேலமரங்கள் நிறைந்ததுமான வேலைமாநகர் இது" என்று சுவாமிகளிடம் கூறினர். கூறியபிறகு ஊர்க்குள் வண்டி சென்றது. சென்ற தெரு மகம்மதியர் வாழிடம். சுவாமிகள் இவ்வூரே தனக்குரியதாம் என்றுணர்ந்து, வண்டியினின்றும் தொப்பென்றிறங்கி, ஒரு மகம்மதியன் வீட்டுக்குள் ஓடினார் கோவணமும் இல்லாமல். அவ்வளவுதான்! சொல்லவா வேண்டும்! கோஷாக்கள் அலறித் துடித்தனர். அங்குற்ற மூர்க்கர்கள் சிலர் சுவாமிகளை நையப்புடைத்

தனர்; கழுத்தில் கைவைத்தும் தள்ளினர். துன்புறுத்துங்கால் சுவாமிகளுக்கு எள்ளளவும் ஊறு நேரவில்லை. ஊறு செய்தவர்களையே அவ்வனைத்தும் சார்ந்தன. அறிவு தடுமாறிய அரிமர்த்தனன், அவைக்கள அமைச்சரான வாதவூரடிகளை அடித்தக்கால், அவ்வடி அவரை ஊறு செய்யாது, பிறரைச் செய்ததுபோல் கொள்க. எல்லாரும் சுவாமிகளைப் பணிந்து போற்றினர். நையப் புடைத்த வம்பர்கள் சுவாமிகளின் அன்பராயினர். எல்லாரும் சுவாமிகளைக் குருவெனக் கொண்டனர்.

இராயவேலூரின் கடைத்தெருக்களில், சுவாமிகள் பாலனைப்போல் திரிந்து வருவாராயினர். கடைக்காரர்கள் அனைவரும் சுவாமிகள் தங்கள் கடைக்கு வரவேண்டும் என்று இன்முகத்துடன் எதிர்பார்த்து நிற்பார்களாம். சுவாமிகள் ஏதாவதொரு கடையில் சென்று உட்கார்ந்து மீண்டாலும், நல்ல வியாபாரம் அன்று நடைபெறுமாம். எண்ணிறந்த சித்து விளையாடல்கள் புரிந்து வாழ்ந்தார் என்பதை முத்தமிழ் ரத்னாகரம் - திருவொத்தூர் - பானு கவி சுவாமிகள் அருளியுள்ள "தோபா சுவாமிகள் புராணம்" என்ற நூலாலும், வேதாந்த மொழிபெயர்ப்பாசிரியரான கா. சிவானந்த யதீந்திர சுவாமிகள் அருளியுள்ள "தோபாசுவாமிகள் புராணவசனம்" என்ற நூலாலும் தெள்ளிதின் உணரலாம். ஈண்டு விரிவஞ்சி விடுக்கின்றோம்.

## முக்தி எய்தல்

வேலூரிலேயே சுவாமிகள் முக்தி எய்தினார். வேலூர் என்பது வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சிறந்த நகரமாகும். இவ்வூர், காட்டுப்பாடி சந்திப்பிற்கு அருகில் அமைந்ததாகும். சரித்திரத்தில், பெரும்புகழும் இவ்வூர் பெற்றிருக்கிறது. இத்தகு ஊரில் சுவாமிகள் வசித்து வருங்கால், எவ்வளவோ சீடர்கள் சுவாமிகளுக்கு இருந்தனர். எனினும் அவருக்கு உண்மைச் சீடராக வாய்த்தவர் சித்தநாதயோகியாவர். எப்பொழுதும் சுவாமிகளை விட்டு நீங்காது இருந்து வந்தார் மேற்கூறிய சீடர். ஒரு நாள் சுவாமிகள் சித்தநாதரை நோக்கி "நான் போகின்



றேன்! வருகிறீரா?" என்று பன்முறை திரும்பத்திரும்பக் கேள்வியைக் கேட்டுவந்தார். சமாதி நிலயத்திற்கு மேற்கேயுள்ள ஒருகால்வாய் வரை போவதும், வருவதுமாக இருந்தருளினார். அதைக்கண்ட சித்தநாதர் முதலானோர் வியப்புற்று இது என்ன? சுவாமிகள் திருவருள் விளையாட்டை ஒன்றும் அறிகிலோமே! என்று மயங்கினார். சிறிது நேரத்திற்கெல்லாம் "நான்போகின்றேன்" என்று திருவாய் மலர்ந்தருளி ஏற்கனவே கட்டியிருந்த சமாதியில் சென்று பத்மாசனமிட்டு இறைவன் இணையடிகளைச் சார்ந்தார். சுவாமிகளின் சமாதியை வழிபட்டு முக்திபெற்றோருள் பின்வருபவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். மேட்டூர் சுவாமிகள், தெய்வசிகாமணி சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள் முதலானோர்.

சீரியசாலி பதினெழு நூற்றிற் செல்லெழு பத்திரண்டதனி
லாரியனீச னணியுருவாகி யமர்ந்தன னவன்புகழ்பல் லோர் [த்தி
பாரினி லுரைத்தப் பயன்பெறுகின்றார் பாவியேன் றனக்குமிச்சிவ
னேரியல்சரிதமறை வழியளித்தவிறைவியைப் பணிதலென்கடனால்.

## முடிபு

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஔவைப் பாட்டியின் முதுமொழியல்லவா? அத்தகு பெறுதற்கரிய பிறவிப்பேற்றை எடுத்தவர்கள் யாரைத் துணையாகக் கொண்டு வாழ வேண்டும்? கல்வி-கேள்விகளில் குணநலன்களில் சிறந்த பெரியராயினோரை அல்லவா சிறந்த துணையெனக் கொண்டு வாழ்தல் வேண்டும்." நல்லாரிணக்கமும் நின் பூசை நேசமும், ஞானமுமேயல்லாது வேறுநிலையுளதோ? என்று அழுத்தந்திருத்தமாகப் பட்டினத்தடிகள் கச்சி ஏகம்பனிடம் முறையிடுவதைக் கூர்ந்து நோக்குக. தவமூதாளரான பெரியராயினோரை அன்று தமிழ்நாடு ஏன்? பாரதநாடே போற்றி வந்தது என்பதை வரலாற்று நூல்களால் அறியலாம். நமக்கொரு சிறந்த எடுத்துக்காட்டு வள்ளுவர் இருக்கின்றாரே! நோக்குங்கள்!

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். (குறள். 1, அதி 45)

(கருத்து) அறத்தின் நுட்பத்தை யறிந்து, தன்னைப் பார்க்கிலும் உயர்ந்த அறிவுடையவரது சிநேகத்தை மக்களானோர் அச்சிநேகிதத்தின் அருமை யுணர்ந்து, கொள்ளும் திறம் அறிதல்வேண்டும்.

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (குறள். 3, அதி 45)

(பொருள்) அறிவாலுயர்ந்த பெரியாரை அவர் மகிழத் தக்க காரியங்களைச் செய்து, தமக்குச் சிறந்தவராக வசப் படுத்திக் கொள்ளுதலானது பெறுதற்கரிய பேறுகளெல்லா வற்றுள்ளும் சிறந்தது என்பதாம்.

பெரியாரைத் துணைகொண்டு வாழும் வாழ்வுதான் பெருமையுடையது; நன்மையும் உடையதாகும். அவர் களின் இன் துணை தீநெறிப் போவதை நீக்கி, நன்னெறிக் குச்செல்ல வழிகாட்டி நலம் பயப்பதாகும். இருக்கும் பெரியோர்களையும், இறந்த செயற்கரிய செயல்கள் புரிந்த பெரியோர்களையும் வாழ்வில் வழிகாட்டுபவர்களாக அமைத் துக் கொள்ளலாம். வாழ்வெனும் கடல் கொந்தளிப்பில் அவதியுற்றுச் செல்லுங்கால், பாதை சீராக அறிந்து கொள்ள முடியாத தடுமாற்றத்தில் இருக்குங்கால், சீர் செய்து இதுதான் சுகுரியான பாதை அஞ்சாமல் செல்! என்று அறிவிக்கும் பெரியோர்களின் வாய்ச்சொற்கள் (மறைமொழிகள்) மந்திரங்கள் எனக் கொள்ளினும் நன்று. "மொழிப்பொருள் தெய்வம் வழித்துணையாக" என்று இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் கவுந்தி யடிகள் வாக்காக வைத்துக் கூறுவதை ஈண்டு நினைமின்!

சிவஞானம் பெற்ற பெரியோர்கள் வாழும் தேசம் நல்லறிவுச்சுடர் கொளுத்தப்பெற்றுத் திகழும் நல்லியல்பு களுடன் மக்கள் திகழ்வதோடு நவயோகங்கள் பெற்றுத் திகழ்வர் என்பார் திருமூலர்.

சிவயோக ஞானி செறிந்த வத்தேசம்
அவயோக மின்றியறி வோருண்டாகும்



நவயோக கங்கைகூடும் நல்லியல் சாணும்
பவலோக மின்றிப் பரலோக மாமே.

—திருமூலர்

### வாழ்த்து

எந்தைகாழி வந்தநாதனிணைச் சரண்கள் வாழியவே!
யந்தநாதனருளை யுற்றவண்ணல் சோபா வாழியவே!
அந்திவண்ணனோடை வன்றனடியர் வாழி வாழியவே!
ஐந்துவன்ன மோடுநீறமர்ந்த கண்டி வாழியவே!

---

## 9. ஒழிபு

திருவருள் தவநெறி மன்றச் சமயவளர்ச்சி மாநாட்டின்

# நிகழ்ச்சிகளின் சுருக்கம்

திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில் 31-5-53உ ஞாயிறு காலை 10-மணிக்கு மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன குருபீட இளவரசு திருப்பெருந்திரு. திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் கூடிற்று.

ஓதுவாமூர்த்திகளின் திருமுறைப் பாராயணத்துடன் மாநாடு துவங்கிற்று.

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி குருமகா சன்னி தானம் திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் நல்வாய்மொழி நல்கியது.

தலைமை உரையில் ஞான இளவரசு சைவத்தின் மாண்பையும், இன்றைய நிலையையும், சைவத்தை உலக முழுவதும் பரப்ப வேண்டிய கடப்பாட்டையும், மிகத் தெளிவாகவும், தம் அநுபவங்களோடும் விளக்கியது கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் அமைந்தது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், ஈழ நாட்டிலிருந்தும் 300-க்கு மேற்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகளும், 1000-க்கு மேற்பட்ட பார்வையாளர்களும் மாநாட்டுக்கு வந்திருந்து பேருக்கம் தந்தனர்.

மகா வித்துவான் ஆறுமுக நாவலர், திருமுருக. கிருபானந்தவாரி, திரு. A. K. சுப்பிரமணிய பிள்ளை, இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தான மேலாள் திரு. இராமநாத பிள்ளை, திருவாரூர் சுவாமி கிருஷ்ணாநந்தா, கோவில்பட்டி திரு. சிவக்கிழார் திருநாவுக்கரசனார், குலசை வீர. சிவசுப்பிரமணியம், கொழும்பு தட்சணத்தார் வேளாளர் மகமை சங்கத் தலைவர் திரு. கே. வி. கணபதி முதலியோர் சமய வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய இன்றியமையாப் பணிகளை அநுபவங்களுடன் முறைப்படுத்திக் கூறினர்.

தலைவரவர்கள் அற நிலையங்களும் ஆதீனங்களும் ஒருமுகப்பட்டு வேலை செய்யவேண்டிய கடப்பாட்டை நினைவூட்டி, தாம் பிற ஆதீனங்களின் ஒத்துழைப்பை வரவேற்பதாகவும் கூறினார்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேறின.

## தீர்மானங்கள்

(1) மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன இளவரசுப் பட்டத்தை ஏற்றுப் பதிவுசெய்யப்பட்ட திருவருள் தவநெறி மன்றம் ஒன்று நிறுவி அதன் வளர்ச்சிக்காக ரூ. 50000 நன்கொடையாக அளித்தருளிச் சமயவளர்ச்சிப் பணிபுரியத் திருவுளங்கொண்ட ஆதீன இளவரசர் திருப்பெருந்திரு சோமசுந்தர அடிகளார் அவர்களுக்கு இம்மாநாடு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : திரு. கிருபானந்தவாரி

பின்மொழிந்தவர் : திரு. ஆறுமுகநாவலர்.

(2) இந்த மன்றத்தோடு தமிழகத்திலுள்ள மற்ற எல்லாச் சங்கங்களும் ஒத்துழைத்துச் சமய வளர்ச்சி வேலைகளில் ஈடுபட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.



முன்மொழிந்தவர் : திரு. தருமலிங்க முதலியார்
Retd. Deputy Director of Agriculture.

பின்மொழிந்தவர் : திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

(3) இன்று சினிமாப்படங்கள், நாடகங்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள், பிரசங்கங்கள் மூலமாக நடைபெறும் மதப்பழிப்புப் பிரசாரங்களை அரசாங்கம் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து இம்மாநாடு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. மேற்சொன்ன மதப் பழிப்புப் பிரசாரங்கள் இந்தியன் பீனல்கோடு 295ஏ. பிரிவின்படி தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆதலால் மேற்படி 295 ஏ. செக்ஷன் பிரகாரம் சினிமா, நாடகம், பத்திரிகைப்பிரசுரம் பிரசங்கம் இவை மூலமாக நடத்தப்பெறும் சமயப் பழிப்புப் பிரசாரத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : திரு. M. சண்முகசுப்பிரமணியம்
பி.ஏ., பி.எல்., வழக்குரைஞர்.

பின்மொழிந்தவர் : திரு. கி. பழநியப்பன்

(4) மதுரைத் திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் சமயப் பணிகளுக்குத் தமிழகத்திலுள்ள எல்லாத் தேவஸ்தான நிதிகளிலிருந்தும், மடாலயங்களிலிருந்தும் பிற அறநிலையங்களிலிருந்தும் பொருளுதவி செய்யவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : திரு. சிவக்கிழார் திருநாவுக்கரசனார்

பின்மொழிந்தவர் : திரு. P. A. நடேச பிள்ளை

(5) எல்லா மடாலயங்களிலும் சமய அறிவும், உலகியல் அறிவும் வாய்ந்த உத்தமத் துறவி ஒருவரை இளவரசுப்பட்டம் சூட்டிச் சமயப்பணிபுரிவிக்க வேண்டுமென்று இம்மாநாடு மகா.. சன்னிதானங்களைக் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : திரு. D. மரகதசுப்பிரமணியம்
பின்மொழிந்தவர் : திரு. வீர. சிவசுப்பிரமணியம்

(6) பிற சமயத்தினரைச் சைவசமயத்தில் சேர்த்து நாள்தோறும் சைவசமயத்தை வளர்த்து வரும் "தொண்டன்" ஆசிரியர் திரு. ஆறுமுக நாவலர் முயற்சியைப் பெரிதும் இம்மாநாடு பாராட்டுகிறது. அவர்களது இந்த நன் முயற்சிக்கு எல்லா அறநிலையங்களும் உதவிசெய்து கோவில் இல்லாத ஊர்களில் சைவ வழிபாட்டுக்குரிய கோயில்கள் நிறுவவும், பூசை வழிபாடு காரியங்கள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்து ஊக்கமளிக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : திரு. கிருபானந்தவாரி
பின்மொழிந்தவர் : திரு. க. சண்முகசுந்தரம்

(7) மேற்சொன்ன தீர்மானங்கள் சம்பந்தமாக ஒரு குழு அமைத்துச் சென்னை முதன் மந்திரியையும் அறநிலைய மந்திரியையும் பேட்டிகண்டு அதற்காவன செய்யத் திருவருள் தவநெறி மன்றத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிந்தவர் : திரு. க. சண்முகசுந்தரம்
பின்மொழிந்தவர் : திரு. M. சண்முகசுப்பிரமணியம்

தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு விநயத்துடன் வேண்டுகிறோம்.

மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திருப்பெருந்திரு. சோமசுந்தர தேசிகரவர்களுக்கும், நல்லாசி வழங்கிய திருப்பெருந்திரு. அருணாசல தேசிகரவர்களுக்கும், ஏனைய சமயப்பற்றுடைய பெருந்தகையாளர்களுக்கும், மற்றும் மாநாடு வெற்றிபெற உழைத்த எல்லா அன்பர்களுக்கும் உளம் நிறைந்த நன்றி செலுத்துவதோடு, அன்னாருக்கு எல்லா நலன்களும் வாய்க்கத் திருவருளை வழுத்துகிறோம்.

மதுரை
4—6—5

கிருபானந்தவாரி
ஆறுமுக நாவலர்
அமைச்சர்கள்

86892

தேர்வு நவம்பர்மாதம் நடைபெறும். தேர்வு நடைபெறும் ஊர் தேதி முதலிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

(4) சமாஜ உறுப்பினர் பொதுக் கூட்டம் 8–8–53 சனிக்கிழமை காலை 8 மணிக்கு, இராயப்பேட்டை ஸ்ரீபால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் 'குகானந்த நிலையத்'தில் கூடும். அன்று போதுமான அங்கத்தவர் வராவிட்டால் அக்கூட்டம் அதேஇடத்தில் 9–8–53 ஞாயிறு காலை 8 மணிக்குக் கூடி வந்திருந்தோரைக் கொண்டு விஷயாலோசனை செய்யும். அங்கத்தினர் அனைவரும் வரவேண்டுகிறோம்.

(5) சமாஜச் செயற்குழுக்கூட்டம் 9–8–53 ஞாயிறு காலை 9 மணிக்கு மேற்படி குகானந்த நிலையத்தில் கூடும். செயற்குழு அங்கத்தவர் வரவேண்டுகிறோம்.

(6) சமாஜ அலுவலக முகவரி மாற்றத்தை சீப் பிரஸிடென்சி மேஜிஸ்ட்ரேட் முன்பு, சித்தாந்தம் வெளியிடுபவர் (Publisher) நேராகத் தாக்கல் செய்யவேண்டும். இது சம்பந்தமான ஏற்பாடுகள் முடியும்வரை சித்தாந்தம் வெளியீட்டு விலாசம் 53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை என்று அச்சிடப்படும். ஆயினும் கடிதப் போக்குவரத்து 192, லாயிட்ஸ் ரோட், சென்னை 14-க்கே அனுப்பவேண்டும்.

---

## சிதம்பரத்தில் சைவ அறிஞர் ஆலோசனைக் கூட்டம்

தமிழ் நாட்டில் அருவருக்கத் தக்க சமயக் கண்டனக் ளர்ச்சி நிகழ்ந்திருப்பது பல்லாயிரவர்க்கு வருத்தத்தையும் கவலையையும் உண்டுபண்ணியுள்ளது. இத்தருணத்தில் உண் மைச் சைவப் பாதுகாப்பிற்காக யாது செய்யவேண்டும் என்பது பற்றி, முதலில் சைவஅறிஞர் தம்முட் கலந்து ஆராய்தல் அவசியம். இதனைக் கருதி, சைவ சித்தாந்த கா சமாஜத் தலைவர், ஆனித் திருமஞ்சனத் தரிசனத்திற் ாகச் சிதம்பரத்திற்கு வரும் சைவ அறிஞர்களைக் கொண்டு தம்பரத்திலேயே ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்த ஏற் டு செய்யுமாறு தில்லைத் திருமுறைக்கழகத் தலைவருக்கும், மெய்கண்ட வித்தியாசாலையார்க்கும், மற்றுஞ் சில சைவ க்கியஸ்தர்களுக்கும் வேண்டுகோள் அனுப்பினர். அங்

கனமே, மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடத்தின் இளவரசுப் பட்டத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகட்கும் விண்ணப்ப முனுப்பினர். அம்பலவாணர் திருவருள் கைகூடிய வண்ணம் இக்கருத்தை ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளும் சிதம்பரத்துறையும் சைவ அறிஞர்களும் அன்புடன் ஏற்றருளினர்கள். ஆனித் திருமஞ்சன நாளில், காலையிலும் பிற்பகலிலும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தலைமையில், சைவ அறிஞர் தனிக்கூட்டம் கூடிச் சமயநிலை பற்றி அமைதியாக ஆராய்ந்தது. (1) உருவ வழிபாட்டின் தத்துவமும் அவசியமும், (2) முற்பிறப்பு பிற்பிறப் புண்மை, (3) ஆவியுலக ஆராய்ச்சி என்னும் பொருள்கள் பற்றித் தக்காரைக் கொண்டு நூல்கள் எழுதுவித்து, அறிஞர் குழாத்தில் வைத்துப் பரிசீலித்து வெளியிட வேண்டுவது முதற்கடமை என்று தீர்மானித்தது. சைவ சமயக் கல்லூரி இன்னும் ஏற்படாமையால், தற்காலிகமாக மூன்றுமாதகால அளவில் பயனுள்ள முறையில் சமயப் பிரசாரப்பயிற்சி யளிப்பதற்கு விரைவில் வழிசெய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தது. மீண்டும் இத்தகைய கூட்டம் கூடுவது இன்றியமையாததென்று அறிஞர் அனைவரும் கருதினர். புராணக் கதைகளை எவ்வாறுகொள்ளுதல் முறைமை என்பதைத் தக்க வல்லுநர் கூடி ஆராய்ந்து உலகிற் கறிவிக்கவேண்டியது அவசியம் என்று பலர் கருதினர்.

அன்று மாலை, சிதம்பரத் தலத்து ஆயிரக்கால் மண்டபத்தில், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தலைமையில் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சுவாமிகள் திருக்கோலமும் தலைமையுரையும் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளை நினைவூட்டின. திருவாளர்கள் C. N. தண்டபாணிப் பிள்ளை, ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான், ச. சச்சிதானந்தம் பிள்ளை, வித்வான்-வரதராஜ ஐயர், குலசை - வீரசிவசுப்பிரமணியம், வித்வான்-வெள்ளைவாரணனார் இவர்கள் பேசினர்.

DIGITIZED

**Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi, Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, 53, Thiruvalluvar Street, (Zones Road), Saidapet, Madras-15.**